# 8. அரசிறைக் கொள்கையும் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளும்

## 8.1. பொது நோக்கும் கொள்கை உபாயமும்

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் வெற்றிகரமாக எய்தப்பெற்ற அரசிறைப் பற்றாக்குறையின் குறைப்பினை 1998இல் பேண இயலாது காணப்பட்டது. நடைமுறைக் கணக்கில் மிகையொன்றினை உருவாக்குகின்ற வேளையில் மொத்தப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.5 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு வரவு செலவுத் திட்டம் எதிர்பார்த்தது. உலக பொருளாதாரத்தின் எதிர்கால வாய்ப்புக்கள், உள்நாட்டு யுத்தச் செலவுகள் பொருட்கள் பணிகள் வரியின் அரசிறை உட்படுத்தல்கள் என்பன தொடர்பாக 1997 இறுதியில் நிலவிய அதிகூடிய நிச்சயமற்ற தன்மைகளைக் கருத்திற் கொள்ளும்போது இது ஆர்வம் மிக்கதொரு இலக்காகக் காணப்பட்டது. சிறந்த நிதியியல் கட்டுப்பாடுகள், அரசிறையின் ஆற்றலை அதிகரித்தல், நடைமுறைச் செலவின் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தல், தனியார் துறையின் பங்கேற்புடன் அரச தொழில் முயற்சிகளைச் சீர்திருத்தல் மேலும் முன்னேற்றம் மற்றும் கடன் முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல் என்பனவற்றின் ஊடாக அரசிறைப் பற்றாக்குறையில் குறைப்பொன்று எய்தப்படவிருந்தது. உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமையானது விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குத் தடையொன்றாகக் காணப்பட்டமையினால் பொது முதலீட்டினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.9 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும் 1998 வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது.

மொத்தப் பற்றாக்குறையின் நியதிகளில் முன்னைய மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1998இல் அரசிறைச் செயலாற்றம் பின்னடைவினைக் கொண்டிருந்தது. எனினும், கொள்கைப் பக்கத்தில் வரிமுறை தொடர்பான அமைப்புச் சீராக்கங்கள், கடன் முகாமைத்துவம் மற்றும் அரச தொழில் முயற்சிச் சீராக்கங்கள் என்பனவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது. மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை (கொடைகளுக்கு முன்னரும் தனியார் மயமாக்கல் பெறுகைகள் நீங்கலாகவும்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.2 சதவீதத்திற்கு அதிகரித்து 1998 வரவு செலவுத் திட்ட இலக்கான 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீத அரசிறை தவறு ஒன்றைக் குறித்துக்காட்டியது. நடைமுறைக் கணக்கு தொடர்ந்தும் பற்றாக்குறையையே காட்டியதோடு, பற்றாக்குறை 1997இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.2 சதவீதத்திலிருந்து 2.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. உலகளாவிய பொருளாதாரத்தின் பாதகமான நிகழ்வுகளின் விளைவாக பொருளாதாரம் மெதுவடைந்தமையின் காரணமாக வருவாய் பாதிக்கப்பட்டமையினால் 1998இல் இந்தத் தவறு தவிர்க்கமுடியாததொன்றாகக் காணப்பட்ட வேளையில் இந்தத் தவறுகளின் பரிமாணம் கவனத்துக்குரியதாக இருந்தது. முதலீட்டையும் தொழில் வாய்ப்புக்களையும் மேம்படுத்துவதற்கான வட்டி வீதக் குறைப்புக்கான குறிக்கோளை அது தடைசெய்தது. பற்றாக்குறை நிதியிடலுக்கான அரசாங்கத்தின் அதிகரித்த மூலவளத் தேவைப்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரசின் படுகடன் கருவிகளுக்கும் முதன்மைக் கடன் வழங்கலுக்குமான வட்டிவீதங்கள் இவ்வாண்டில் உண்மையில் அதிகரிக்கத் தொடங்கின. விலை உறுதிப்பாடு மற்றும் செலாவணி வீதம் என்பனவற்றில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடுமாகையால் வட்டி வீதங்களைக் குறைப்பதற்காக நாணயக் கொள்கையில் மேலும் தளர்த்தல்களை மேற்கொள்ளுவது சாத்தியமாகக் காணப்படவில்லை. பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மோசமாகக் காணப்படுகின்ற நிலைமையில் 1999 வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதுபோல 1999இற்கு இலக்கிடப்பட்ட மொத்தப் பற்றாக்குறையான 6 சதவீதத்தை எய்துவது சாத்தியமாகாது என்பதால் 1999இல் இந்த அளவிலான வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.5 சதவீதத்திற்கு கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

முழுமையான நியதிகளில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூ.23,086 மில்லியனிலிருந்து ரூ.93,147 மில்லியனுக்கு அதிகரித்தது. அரசிறைப் பற்றாக்குறை விரிவடைவதற்கு மேலதிக யுத்தச் செலவுகளும் அரசிறை வீழ்ச்சியுமே முக்கிய காரணங்களாகும். அதிகரித்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் 29 சதவீதத்திற்கு மேலதிக பாதுகாப்புச் செலவு வகைகூறியது. புரள்வு வரிகள், பொருட்கள் பணிகள் வரி, வருமானவரிகள், இறக்குமதித் தீர்வைகள் என்பனவற்றில் முக்கியமாக எதிர்பார்த்ததைவிட வருவாய் வீழ்ச்சிகள் பிரதிபலிக்கப்பட்டதோடு கிட்டத்தட்ட 58 சதவீதத்திற்கு வகைகூறின. சம்பளங்கள், கூலிகள் மற்றும் இழப்புக்களைக் கொண்டுள்ள அரசதுறை நிறுவனங்களுக்கான மாற்றல்கள் (இலங்கை புகையிரத அஞ்சல் திணைக்களமும்) போன்ற பாதுகாப்புக்கல்லாத உயர் செலவினங்களும் 7 சதவீதத்திற்கு வகைகூறின. மந்தமான உலக சந்தை நிலைமைகளின் கீழ் குறிப்பாக மசகெண்ணெய், கோதுமைத் தானியம், வளமாக்கிகள் மற்றும் சீனி என்பனவற்றின் இறக்குமதி விலைகளின் கடுமையான குறைப்பின் காரணமாக நாடு நன்மையடைந்ததால் விரிவடைந்த வரவு செலவுத்

திட்டப் பற்றாக்குறையின் பணவீக்கத் தாக்கங்கள் 1998இல் தெளிவாகப் புலப்படவில்லை. ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் 9.6 சதவீத பெறுமானத் தேய்வின் மத்தியிலும் இவ்விலைக் குறைப்புக்கள் இறக்குமதிச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியதோடு வங்கித் தொழில் முறைக்கு அதிகளவில் மூலவளங்களைக் கிடைக்கச் செய்தது. இலங்கையினால் இறக்குமதி செய்யப்படும் முக்கிய பண்டங்களின் சருவதேச விலைகளின் குறைப்பினால் விடுவிக்கப்பட்ட மூலவளங்களும் தனியார் துறைக்கான கொடுகடனின் மெதுவான வளர்ச்சியும் வட்டி வீதங்களில் மேலதிக அழுத்தங்களை ஏற்படுத்தாது விரிவடைந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் பாரிய பாகமொன்றிற்கு நிதியிடுவதற்கு வங்கித்தொழில் முறையை இயலச் செய்தது.

வரி அமைப்பு முறையை மேலும் இலகுபடுத்தல், வரி வீதங்களைக் குறைத்தல், வரி அடிப்படையை விரிவாக்குதல், வரிமுறையில் புலப்படும் தன்மையை மேலும் அதிகரித்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்ட வரிக் கொள்கைச் சீர்திருத்தங்கள் 1998இலும் தொடர்ந்தன. வரி அறவீட்டில் தாழ்ந்த வீதங்களுக்கான நகர்வானது சேமிப்புக்களையும் தனியார் முதலீட்டையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. புரள்வு வரிக்குப் பதிலாக 1998 ஏப்பிரல் 1ஆம்நாளிலிருந்து செயற்படும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் பணிகள் வரியானது வரி அமைப்பு முறையில் முக்கிய மாற்றமொன்றாக விளங்கியது. புரள்வு வரியின் தொடர் இணைப்புத் தாக்கத்தினை இல்லாதொழித்து உள்நாட்டு நுகர்வு வரிக்கு உட்படுத்தப்படும் வேளையில் அனைத்து ஏற்றுமதிகளையும் பூச்சிய வீதத்தில் வைக்கும் செல்லிடக் கோட்பாட்டின் நடைமுறைப்படுத்தலுக்கே பொருட்கள் பணிகள் வரி கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் பதனிடப்படாத வேளாண்மை உற்பத்திப் பொருட்கள், பொதுப் போக்குவரத்து, வளமாக்கிகள், சீமெந்து, மருந்தாக்கற் பொருட்கள் மற்றும் பெரும்பாலான அத்தியாவசிய உணவு விடயங்கள் என்பன பொருட்கள் பணிகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தன. கடுமையான நிருவாக நடவடிக்கையின்மூலம் புரள்வு வரியின்கீழ் விலக்களிக்கப்பட்டிருந்த ஏற்றுமதிப் பதனிடலுக்கான இறக்குமதிகள் மீளளிக்கும் பொறிமுறையொன்றுடன் பொருட்கள் பணிகள் வரியின்கீழ் கொண்டுவரப்பட்டன. ஏற்றுமதிப் பதனிடலுக்கான இறக்குமதிப் பொருட்கள் பணிகள் வரியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும் அத்தகைய பொருட்களின் இறக்குமதியாளர்கள் தமது வரிப் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு 45 நாட்கள் தாமத வசதிகளுக்கு உரித்துடையவராவர். (பின்னர் இந்தக் காலம் 60 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது) வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகள் துறை தொடர்ந்தும் புரள்வு வரியின் கீழ் காணப்பட்டன. ஆனாலும் நிதியங்களின் செலவினைக் குறைக்கும் நோக்கில் பிரயோகிக்கப்படக்கூடிய வரி வீதங்கள் 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டன. தொடக்கத்தில் பொருட்கள் பணிகள் தனிவீதமாக 12.5 சதவீதம் பிரயோகிக்கப்பட்டது. இந்த வீதத்தின் வருவாய் வீதமானது முன்னைய புரள்வு வரி முறையினைவிடக் குறைவாகக் காணப்பட்டதுடன் பொதுமக்களின் ஏற்றுக் கொள்ளலை எய்துவதற்காக தாழ்ந்த வீதமொன்றுடன் ஆரம்பிப்பது முன்மதியுடைய செயலாகும் எனக் கருதப்பட்டது.

பொருட்கள் பணிகள் வரியின் அறிமுகப் படுத்தலினால் எழும் வருவாய் இழப்பினை எதிரீடு செய்வதற்காக சில விடயங்கள் மீதான உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டது. இதன்படி பெற்றோல் மீதான உற்பத்தி வரி 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் புரள்வு வரியின்கீழ் வெறியக் குடிவகை மீதான உற்பத்தி வரி 12.75 சதவீதத்திலிருந்து 20.2 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. சிகரட்டுக்களைப் பொறுத்தமட்டில் பெறுமதியினையும் உள்ளடக்கி உற்பத்தி வரிக்காக பொருட்கள் பணிகள் வீதம் பிரயோகிக்கப்பட்டது.

வருமானவரி அமைப்பு முறையினை மேலும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக 1997இன் வரவு செலவுத் திட்டம் கூட்டு இலாப வரி வீதத்தினதும் தனிப்பட்ட வருமானவரி வீதத்தினதும் குறைப்பொன்றை அறிவித்ததுடன் இவை 1998இல் 35 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்கும் பின்னர் 1999இல் 25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட இருந்தன. எனினும், வருவாய்கள் நிலைமைகள் கருத்திற் கொள்ளப்பட்டமையின் காரணமாக 1998இல் இந்த முன்மொழிவு நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதற்குப் பதிலாக தெரிந்தெடுக்கப் பட்ட முன்னுரிமைத் துறைகளுக்கு வருமானவரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. இதன்படி வேளாண்மை, மீன்பிடித் தொழில், கால்நடை வளர்ப்பு மற்றும்சுற்றுலா துறையிலுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான கூட்டுவரி வீதம் 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தொழிற்சாலைகளின் மீள் அமைவிடம், புதிய ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுதல், பிரதேசத்துக்குக் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான ஒப்படைக்கப்பட்ட பொருளாதார மையங்கள் என்பனவற்றுக்கான இறை ஊக்குவிப்புக்களுடன் 1998இல் பிராந்திய கைத்தொழில் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக மின்னியல், மட்பாண்டமும் கண்ணாடிப் பாண்டங்களும், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மென் மற்றும் கனரக பொறியியல் கைத்தொழில்கள் இரத்தினக்கல் மற்றும் வைரங்களின் பட்டை தீட்டலும் பதனிடலும், ஆபரணத் தயாரிப்பு

போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட உந்து கைத்தொழில்களுக்கு முதலீட்டுச் சபைச் சலுகைகள் வழங்கப்பட்டன.

மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் உதவிகள் 1998இலும் தொடர்ந்தன. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலைக் கோரிநிற்கும் கம்பனிகளுக்கும் ஏற்கெனவே பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் 5 சதவீதப் புள்ளிகளிலான வருமானவரிச் சலுகை ஒன்று வழங்கப்பட்டது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் கம்பனிகள் பட்டியலிடலைப் பெற்றுக் கொள்ளுவதை ஊக்குவிக்கும் நோக்கில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத கம்பனிகளில் வைத்திருக்கப்பட்ட பங்குடைமைகளின் விற்பனையிலிருந்து பெறப்படும் மூலதன இலாபங்களுக்கு வருமான வரி விலக்களிப்பு வழங்கப்பட்ட வேளையில் பட்டியல் ஒன்றைக் கோரிநிற்கும் கம்பனிகளினால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் கழிக்கப்படக்கூடிய செலவுகளாகக் கருதப்பட்டன. பங்குச் சந்தையின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் காரணிகளில் ஒன்றாக பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான உயர்ந்த செலவு கருதப்படுகின்றமையால் ஆரம்பப் பொது வழங்கல்களுக்கான முத்திரைத் தீர்வை ஒவ்வொரு ரூ.1,000 இற்கும் 50 சதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் விதிக்கப்பட்ட தீர்வையும் 0.15 சதவீதத்திலிருந்து 0.10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தமது சொந்த சேமலாப நிதியங்களைத் தொழிற்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகள் அனுமதிக்கப்பட்டன. பங்குச் சந்தை நடவடிக்கைகளின் தனியாட்கள் பங்குபற்றுவதை ஊக்குவிக்கும் பொருட்டு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் புதிய பங்குகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பாக மதிப்பிடக்கூடிய வருமானத்தில் ஓர் சலுகைக் குறைப்பு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவில் முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் தீர்ப்பனவு இடர் நேர்வுகளை குறைப்பதற்காக வேண்டி 1998இல் தீர்ப்பனவு உத்தரவாத நிதியமொன்றும் இழப்பீட்டு நிதியமொன்றும் நிறுவப்பட்டன.

பங்குடைமை மற்றும் கடன் பிணையங்கள் சந்தையில் மூலவளங்களின் திரட்டலில் அவை ஆற்றும் பங்கின் நோக்கில் சிறிய முதலீட்டாளர்களிடமிருந்து மூலவளங்களைத் திரட்டும் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களுக்கு அவற்றின் வரி விடுப்பு தகுநிலைக்கு மேலும் நீடிப்பு வழங்கப்பட்டது. தனியார்துறை கடன் பிணையங்கள் சந்தையை ஊக்குவிக்கும் நோக்கில் பதியப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட முறிகள் மற்றும் ஏனைய கடன் உபகரணங்களின் விற்பனையிலிருந்து பெறப்படும் மூலதன இலாபங்களின்மீது வருமானவரி விலக்களிப்பு வழங்கப்பட்டது. மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் வாக்குறுதிப் பத்திரங்கள், மாற்று உண்டியல்கள் ஈட்டுப் பிணையங்கள் மற்றும் குத்தகை ஒப்பந்தங்களின் ஈட்டு முறிகள் என்பனவற்றின் மீதான முத்திரைத் தீர்வை 1998இல் கணிசமான அளவில் குறைக்கப்பட்டது. மூலதனச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் செலவினைக் குறைப்பதும் அரச பிணையங்களுக்கான இரண்டாம் நிலைச் சந்தையை மேம்படுத்துவதுமே நோக்கமாகும்.

நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தீர்வை அமைப்பு முறையொன்றினை விதந்துரைப்பதற்காக 1997இல் நியமிக்கப்பட்ட சனாதிபதி தீர்வை ஆணைக்குழு அதனது இறுதி அறிக்கையை 1998இல் சமர்ப்பித்தது. முக்கிய விதந்துரைப்பானது இரண்டு கட்டங்களில் இரு அமைப்பு வீத தீர்வை அமைப்பு முறையொன்றுக்கு நகருவதற்கானதாக இருந்தது. 2000ஆம் ஆண்டில் இரு அமைப்பு வீத தீர்வை அமைப்பினைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இதேவேளையில் வேளாண்மை தவிர்ந்த ஏனையவற்றுக்காக தீர்வை வீதங்கள் ஏற்கெனவே உள்ள 10, 20 மற்றும் 35 சதவீத 3 வீத தீர்வை அமைப்பு முறையினை 5, 10 மற்றும் 30 சதவீத அமைப்பு முறையினால் மாற்றீடு செய்ததன் மூலம் மேலும் குறைக்கப்பட்டன. கைத்தொழில் மூலப்பொருட்களினதும் பொறிகளினதும் அனைத்து இறக்குமதிகளும் 5 சதவீத அமைப்பு முறையினுள் கொண்டுவரப்பட்ட வேளையில் போக்குவரத்து, தொடர்பூட்டல் மற்றும் வைத்திய உபகரணங்களின் இறக்குமதிகள் பூச்சிய வீதத்திலானவை என வகைப்படுத்தப்பட்டன. மோட்டார் கார்கள் மற்றும் ஜீப்பு வண்டிகள் என்பனவற்றின் மீதான தீர்வை 50-100 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட வேளையில் இந்தக் குறைப்பினால் ஏற்படும் வருவாய் இழப்பினை எதிரீடு செய்வதற்காக அனைத்து வாகனங்களின் இறக்குமதிகளின் மீதும் 10 சதவீத மேலதிக உற்பத்தித் தீர்வையொன்று விதிக்கப்பட்டது. உள்நாட்டு விவசாயத் துறையைப் பாதுகாக்கும் நோக்கில் வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் மீதான தீர்வை 35 சதவீதத்தில் பேணப்பட்ட வேளையில் சிலவகை இறக்குமதிகளுக்கான 20 சதவீத தீர்வையும் தொடர்ந்து காணப்பட்டது. எனவே இரண்டு வீத முறையிலான தீர்வை அமைப்பு நிறுவப்படும் வரையிலான இடைக் காலப்பகுதியில் இலங்கை ஐந்து வீத முறையிலான தீர்வை அமைப்பினைக் கொண்டிருக்கும்.

உள்நாட்டில் புடவை மற்றும் ஏனைய துணிவகைகளின் பாரிய அளவிலான உற்பத்தி, சுங்க தாமதங்களை இல்லாதொழித்தல், ஊழல் மற்றும் கள்ளக்கடத்தல் என்பவற்றைக் குறைத்தல், ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையை மேம்படுத்தும் பொருட்டு ஏற்றுமதிக்கான முதன்மை நேரத்தைக் குறைத்தல் பல் நூலிழை ஒப்பந்தத்தின்கீழ் விதிக்கப்பட்டுள்ள

1997இன் இறக்குமதி மொத்த விற்பனை வரி அரசிறைச் சேகரிப்புக்களில் அவதானிக்கப்பட்ட 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. பொருட்கள் பணிகள் வரிமுறையின் கீழ் இறக்குமதி வரித் தளத்தினைக் கணிப்பதற்கான 10 சதவீத அடையாள எல்லை (1997 நவெம்பருக்கு முன் இது 25 சதவீதமாக இருந்தது) ஒழிக்கப்பட்டமையானது விலக்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து பொருட்கள் பணிகள் வரியின் பயனுறு தளத்தை குறைத்திருக்கிறது. மீளளிப்புச் செயற்பாட்டிலுள்ள சாத்தியமான ஒழுங்கீனங்களும் ஏற்றுமதியாளர்களின் வேண்டுகோளின்பேரில் பிற்போடப் பட்ட காலம் 45 நாட்களிலிருந்து 60 நாட்களுக்கு அதிகரித்தமையும், 1998இல் மூலத்திலிருந்தான அரசிறையில் வீழ்ச்சி ஏற்படக் காரணமாயமைந்திருக் கலாம். எனவே வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதன் மூலம் கடுமையான கண்காணிப்புக்களை மேற்கொள் வதன்மூலமும் கணக்காய்வு நடைமுறைகள் மூலமும் பொருட்கள் பணிகள் வரியின் சேகரிப்பை மேம்படுத்துவது அவசியமானதாகும்.

உற்பத்தி வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் ரூ.30,293 மில்லியனாக அமைந்து 1997இன் 12 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதம்கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. மொத்த வரி அரசிறையின் பங்காக நோக்குகையில், உற்பத்தி வரிகள் 1997இன் 17.4 சதவீதத்திலிருந்து 1998இல் 20.2 சதவீதத்திற்கு அதிகரித்தன. எனினும், சிகரட் உற்பத்தி வரிகளிலிருந்தான அரசிறை 1997இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998இல் 6 சதவீதம்கொண்ட குறைந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது, பொருட்கள் மற்றும் பணிகள் வரியின் நடைமுறைப்படுத்தலுடன் அரசிறை மற்றும் விலை நடுநிலைத் தன்மையைப் பேணுவதற்கு சிகரட் மீதான உற்பத்தி வரியின் கீழ் நோக்கிய சீராக்கங்களின் தாக்கத்தினை இது பிரதிபலிக்கிறது. இதன்படி, உற்பத்தியிலிருந்து பொருட்கள் மற்றும் பணிகள் வரிக்குப் பெயர்ந்த வரிச் சேகரிப்புக்கள் ஏறத்தாழ ரூ.1,100 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. இரண்டாவது, 1998 யூலையிலும் நவெம்பரிலும் சிகரட்டுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட விலை அதிகரிப்புக்கள் (மொத்த விலை அதிகரிப்பு 22-25 சதவீதமாக இருந்தது) விற்பனை அதிகரிப்பினை மேலும் பாதித்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் 5 சதவீதத்தினால் அதிகரித்த சிகரட் விற்பனைகள் 1998இன் பின்னரைப் பகுதியில் 1 சதவீதத்திற்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. மாறாக, வெறியக் குடிவகைகளின் ஊடாகத் திரட்டப்பட்ட உற்பத்திவரி அரசிறை 1997இன் 6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1998இல் 24 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இது உற்பத்தி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வெறியக் குடிவகை மீதான உற்பத்தி வரி 12.75 சதவீதத்திலிருந்து ஏப்பிறலில் 20.20 சதவீதத்திற்கு மேல்நோக்கி திருத்தப்பட்டமை, அனைத்துவகை வெறியக்குடிவகைகள் மீதுமான உற்பத்திவரி 10 சதவீதத்தினால் மேலும் அதிகரிக்கப்பட்டமை, தேறல் குடிவகையின் மீது அவற்றின் செறிவின் அடிப்படையில் 1998 நவெம்பரில் உற்பத்தி வரி அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றின் விளைவாகும். மேலும், அனைத்து வெறியக் குடிவகைகளினதும் தேறல் குடிவகைகளினதும் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு குடிவகை உற்பத்தி அரசிறையை அதிகரிக்க உதவியது. வெறியக் குடிவகையின் உற்பத்தி 12 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் தேறல் குடிவகையின் உற்பத்தி 1998இல் தொகை வடிவிலான 28 மில்லியன் பருமு இலீற்றர் ஆண்டு இயலளவைக் கொண்ட இரு பியர் தொழிற் சாலைகள் தொடங்கப்பட்டதுடன்45 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. சிகரட் மற்றும் வெறியக் குடிவகை நீங்கலாக, உற்பத்தி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழான அரசிறைச் சேகரிப்புக்கள் 1998இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் (70 சதவீதம்) பதிவுசெய்தன. இவ்வகையின் கீழான முக்கிய அரசிறை மூலங்களில் ஒன்றான பெற்றோலியத்தின் மீதான உற்பத்தி வரி 1998 ஏப்பிறலில் 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு அதிகரித்து, பெற்றோலியப் பொருட்கள் மற்றும் பணிகள் வரியிலிருந்து விலக்கப்பட்டதனால் ஏற்பட்ட அரசிறை இழப்புக்களை ஈடுசெய்தது. இத்திருத்தம், பெற்றோலிய விற்பனையில் ஏற்பட்ட 4 சதவீத அதிகரிப்புடன் இணைந்து பொருட்கள் மற்றும் பணிகள் வரியிலிருந்து உற்பத்தி வரிக்கு ஏறத்தாழ ரூ.1,500 மில்லியன் கொண்ட அரசிறைப் பெயர்ச்சியை ஏற்படுத்தியது. 1998 நவெம்பரிலிருந்து அனைத்து இறக்குமதி செய்யப்பட்ட தனியார் ஊர்திகளின் மீது விதிக்கப்பட்ட 10 சதவீதம்கொண்ட மேலதிக உற்பத்தி வரியும் உற்பத்தி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன.

தேசிய பாதுகாப்புத் தீர்வை ரூ.21,079 மில்லியனை உருவாக்கி 1998இல் 22 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மொ.உ.உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் தேசிய பாதுகாப்புத் தீர்வை 2.1 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மொத்த வரிச் சேகரிப்புக்களில் இதன் பங்கு 14 சதவீதமாக இருந்தது. பணிகள் துறையின் விரிவாக்கம் வரி விதிக்கத்தக்க பணிகளின் (தொலைத் தொடர்பூட்டல், மின்வலு) விலை அதிகரிப்பின் மேல்நோக்கிய திருத்தத்துடன் சேர்ந்துகொண்டமை மற்றும் 1998இன் பிற்பகுதியில் தேசிய பாதுகாப்புத் தீர்வை 4.5 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை என்பன இம்

மூலத்திலிருந்தான அரசிறை அதிகரிக்க காரணமாயின. இதனால் 1998இல் உள்நாட்டு நடவடிக்கைககள் மீதான தேசிய பாதுகாப்புத் தீர்வையிலிருந்தான அரசிறை 20 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், இறக்குதி மீதான அத்தகைய அரசிறை 18 சதவீதம்கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதன்விளைவாக இறக்குமதிகள் மீதான தேசிய பாதுகாப்புத் தீர்வையின் பங்கு 1997இன் மொத்த தேசிய பாதுகாப்புத் தீர்வைச் சேகரிப்பின் 65 சதவீதத்திலிருந்து 63 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1998இல் இறக்குமதிகளின் பெறுமதி 10 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்திருந்தபோதும், இறக்குமதிகள் மீது சேகரிக்கப்பட்ட தீர்வை முன்னைய ஆண்டினைப்போன்று 5 சதவீதத்தினால் மட்டும் ரூ.28,183 மில்லியனுக்கு அதிகரித்தது. சராசரி தீர்வை வீதம் அதாவது இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதியில் மொத்த இறக்குமதித் தீர்வை விகிதம் 1997இன் 7.7 சதவீதத்திலிருந்து 1998இல் 7.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதித் தீர்வை சேகரிப்புக்களின் மெதுவான வளர்ச்சிக்கு நூல், சீத்தைத் துணி, புடவைக் கைத்தொழிலுக்கான இடைநிலை மற்றும் மூலதனப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வை அகற்றப்பட்டமை மற்றும் வேளாண்மை, மீன்பிடி, கைத்தொழில், தொலைத் தொடர்பூட்டல், கணனி மென்கலத் தயாரிப்பு மற்றும் சுற்றுலா போன்ற முன்னணித் துறைகளுக்கு உதவுவதற்காக இதேபோன்ற சலுகைகள் வழங்கப்பட்டமை போன்றன பெருமளவிற்குக் காரணங்களாகும். புதிய தீர்வை விலக்கல்கள் 1998இல் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளின் வளர்ச்சியை 5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தின. இதன் விளைவாக, மொத்த இறக்குமதிகளில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளின் பங்கு 1997இன் 37 சதவீதத்திலிருந்து 1998இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் சராசரி பயனுறு தீர்வை வீதம் 1998இல் 20.9 சதவீதத்திலேயே மாறாதிருந்தது. மேலும் தீர்வை வீதங்களை 1994இன் 10, 20 மற்றும் 35 வீதங்களிலிருந்து 1998இல் 5, 10 மற்றும் 30 சதவீதங்களுக்கு கீழ்நோக்கித் திருத்தியமைத்த தீர்வை அமைப்பின் ஒழுங்கு முறைப்படுத்தலும் 1998இல் இலங்கையின் முக்கிய தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளின் குறைவடைந்த பன்னாட்டு விலைகளுடன் சேர்ந்துகொண்டமையும் இறக்குமதி தீர்வை சேகரிப்புக்களின் மெதுவான வளர்ச்சிக்குக் காரணமாகும்.

1998இல் வருமான வரிகளிலிருந்தான அரசிறை ரூ.20,429 மில்லியனாக விளங்கி 5 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. இது கூட்டல்லா வருமானவரி ரூ.8,089 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமையாலும் கூட்டு வருமானவரி ரூ.11,788 மில்லியனுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையினாலும் ஏற்பட்டதாகும். நாட்டைக் காக்கும் உதவு தொகையிலிருந்தான சேகரிப்புக்கள் ரூ.327 மில்லியனிலிருந்து ரூ.542 மில்லியனுக்கு அதிகரித்தன. வரி அரசிறையின் விகிதமாக வருமான வரிகள் 1997இன் 15.1 சதவீதத்திலிருந்து 1998இல் 13.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக வருமான வரி அரசிறை 1997இன் 2.4 சதவீதத்திலிருந்து 1998இல் 2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அனைத்து வரி செலுத்துவோருக்கும் ஒருமுகப்படுத்தப்பட்ட அடிமட்டம் ரூ.144,000ஆக இருந்தபோதும் வரிப் பிரிவுகள் ரூ.100,000இற்கு விரிவாக்கப்பட்டமையும் வட்டி வருவாயின் மீதான தடுத்து வைத்தல் வரி 15 சத வீதத்திலிருந்து 1997இல் 10 சதவீதத்திற்கு குறைவடைந்தமையும் தனியார் வருமான வரிகளிலிருந்தான சேகரிப்புக்களில் ஏற்பட்ட

வரைபடம் 8.2
அரசிறை உள்ளமைப்பு



வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. கூட்டு வருமான வரிகள் 11 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. வேளாண்மை, மீன்பிடி, விலங்கு வளர்ப்பு மற்றும் சுற்றுலா போன்ற முன்னுரிமைத்துறைகளின் மீதான கூட்டு வருமான வரி 15 சதவீதத்திற்கு குறைவடைந்தமையும் தயாரிப்பு தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட முதலீட்டு வரிச் சலுகைகள் மற்றும் முதலீட்டுச் சபையின்கீழ் உந்து கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும், கணனி மென்கல கைத்தொழில் மற்றும் பிராந்திய கைத்தொழில் மயமாக்கல் என்பனவற்றுக்கும் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களை கூட்டு வருமானவரிச் சேகரிப்புக்களின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு முக்கிய காரணங்களாக அடையாளம் காணமுடியும்.

1998இல் ரூ.7,069 மில்லியனாக விளங்கிய முத்திரைத் தீர்வைகள் 1997இன் 21சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. வாக்குறுதிச் சான்றிதழ்கள், திறைசேரி உண்டியல்களுடன் தொடர்பான மீள் கொள்வனவு உடன்படிக்கைகள், ஈட்டுடன்கூடிய பிணைகள் போன்ற நிதியியல் கருவிகளின் மீதான முத்திரைத் தீர்வைக் குறைப்பு மற்றும் அதன் பின்னர் தொகுதிக் கடன்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள், திறைசேரி உண்டியல்கள் மீதான மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் போன்ற பட்டியலிடப்பட்ட படுகடன் கருவிகளின் மீதான முத்திரைத் தீர்வை 1998 நவெம்பரில் அகற்றப்பட்டமை என்பன முத்திரைத் தீர்வைச் சேகரிப்புக்களின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றன. மேலும், 1998இல் இறக்குமதிகளின் மெதுவான வளர்ச்சியும் இறக்குமதிகளிலிருந்தான முத்திரைத் தீர்வைச் சேகரிப்புக்களைப் பாதித்தன.

டீசல் மற்றும் ஆடம்பர வரிகளுக்குட்பட்ட ஊர்தி இருப்பு அதிகரித்தபோதும், இம் மூலத்திலிருந்தான அரசிறைகள் ரூ.991 மில்லியனுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1997 ஏப்பிறல் 1ஆம் நாள் தொடக்கம் டீசல் ஊர்திகள் மீதான ஒருமுகப்படுத்தப்பட்ட இரட்டைத் தீர்வை குறைந்த வீதமான ரூ.5,000இல் நிர்ணயிக்கப்பட்டதும் இவ்வீழ்ச்சிக்கு ஓரளவு காரணமாகும். இவ் வரியினைக் கண்காணிப்பதிலுள்ள நலிவுகளும் இவ் வீழ்ச்சிக்கான இன்னொரு காரணமாக இருக்கலாம் போலத் தோன்றுகின்றது.

## வரியல்லா அரசிறை

1998இல் வரியல்லா அரசிறை 1997இன் ரூ.22,524 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.27,664 மில்லியனுக்கு அதிகரித்து 23 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மொத்த அரசிறையில் இதன் பங்கு 1997இன் 14 சதவீதத்துடனும் 1996இன் 11 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 16 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. 1998இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 1997இலும் பார்க்க சிறிதளவு உயர்வாக 2.7 சதவீதமாகக் காணப்பட்டது. வரியல்லா அரசிறையில் ஏற்பட்ட இவ் வளர்ச்சி வரி அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஓரளவிற்கு எதிரீடுசெய்தது. மொத்த வரியல்லா அரசிறையில் 67 சதவீதத்திற்கு வகைகூறும் சொத்து வருமானம் 23 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த வட்டிப் பெறுகைகள் வாடகை, அரச தொழில் முயற்சிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பனவே முக்கிய காரணங்களாகும். 1998இல் வட்டிப் பெறுகைகள் மதிப்பிடப்பட்ட ரூ.7,108 மில்லியனைவிட ரூ.7,786 மில்லியன்களாக அதிகரித்துக் காணப்பட்டமைக்கு நிலுவைகள் சேகரிக்கப்பட்டமையும் இலங்கை மின்சபை (ரூ.3,069 மில்லியன்), இலங்கை துறைமுக அதிகாரசபை (ரூ.727 மில்லியன்), போன்ற அரச தொழில் முயற்சிகளிலிருந்து வரவேண்டிய கொடுப்பனவுகள் மீதான கால வரையறையை மிகக் கடுமையாக நடைமுறைப் படுத்தியமையும் காரணங்களாகும். மத்திய வங்கியின் இலாபமாற்றல்கள் 1997இன் ரூ.1,500 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.2,650 மில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வரசிறை மூலங்களிலிருந்தான அதிகரிப்பு மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் மீதான தடுத்துவைத்தல் வரி ஒதுக்கப்பட்டமையினால் ஏற்பட்ட அரசிறை இழப்புக்களை எதிரீடுசெய்தன. மத்திய வங்கி இலாப மாற்றல்கள் தவிர்ந்த இலாபங்கள், பங்கிலாபங்கள் மற்றும் தீர்வைகள் 1997இன் ரூ.4,284 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.6,190 மில்லியனுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்தன. முக்கிய பங்களிப்பாளர்களாக இலங்கை துறைமுக அதிகாரசபை (ரூ.2,350 மில்லியன்), இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (ரூ.500 மில்லியன்), வரையறுக்கப்பட்ட எயர் லங்கா (ரூ.632 மில்லியன்) என்பன விளங்கின. அதேவேளை, நிதிச் சட்டத்தின்கீழ் இலங்கை வங்கியிடமிருந்து ரூ.1,000 மில்லியன் கொண்ட தீர்வை சேகரிக்கப்பட்டது. இலங்கை வங்கி மக்கள் வங்கி இரண்டிற்குமான மீளமைத்தல் முறிகளின் பேரில் செய்யப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளிலிருந்து இலங்கை வங்கியிடமிருந்து ரூ.658 மில்லியனையும் மக்கள் வங்கியிடமிருந்து ரூ.572 மில்லியனையும் அரசாங்கம் மீட்டுக்கொண்டது. வாடகை வருமானத்திலிருந்தான பெறுகைகள் ரூ.1,410 மில்லியனுக்கு 66 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தனியார் மயமாக்கப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட வாடகை முக்கிய காரணமாகும். கட்டணம் மற்றும் விதிப்புக் கட்டணம், சமூகப் பாதுகாப்பு உதவு தொகைகள் மற்றும் கைத்தொழிலல்லா விற்பனைகள் போன்ற ஏனைய வரியல்லா மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களும் 1998இல் ரூ.9,202 மில்லியனாக விளங்கி 23 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இம் மூலங்கள் 1998இல் வரியல்லா அரசிறை அதிகரிக்க உதவின.

## வெளிநாட்டுக் கொடைகள்

1998இல் வரவு செலவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கொடைகள் ரூ.7,200 மில்லியன்களாக விளங்கி 2 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமையானது 1998இல் படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உதவிப் பாய்ச்சல் குறைவடைந்தமையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. மொ.உ.உற்பத்தி சார்ந்த கொடைகள் 0.7 சதவீதமாக விளங்கி 1997இலும் பார்க்க சிறிதளவு குறைவாகக் காணப்பட்டது. அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டக் கொடைகளின் பேரிலான பெறுகைகள் ரூ.4,750 மில்லியனாக விளங்கின. 1998இல் யப்பான் தொடர்ந்தும் மிகப்பெரும் கொடை வழங்குனராக விளங்கி மொத்தத்தில் 46 சதவீதத்திற்கு வகைகூறியவிடத்து இந்தியா 22 சதவீதமான பங்குகளுடன் அதற்கடுத்த இடத்தைப் பெற்றது.

## 8.4. செலவினம்

1998இல் மொத்த அரச செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 14 சதவீதத்தால் அதிகரித்து ரூ.268,179 மில்லியனாக விளங்கியது. மொ.உ.உ.இன் சதவீதமாக மொத்தச் செலவினம் (26.4 சதவீதத்தில்) 1997இன் அதே மட்டத்திலேயே காணப்பட்டது. எனினும், 1998 வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உ.இன் 24.9 சதவீதத்தைவிட இது கூடியதாகும். செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு முக்கியமாக மேலதிக பாதுகாப்புச் செலவுகள், கூடிய கூலிச் செலவு, அரச முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டதொரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பன விளங்கின. எனினும், மொ.உ.உ.இன் விகிதமொன்றாக நடைமுறைச் செலவினம் குறைந்த வட்டிக் கொடுப்பனவுகள் காரணமாக 1997இன் 20.8 சதவீதத்திலிருந்து 19.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உ.இன் சதவீதமாக பொது முதலீடு 1997இன் 5.8 சதவீதத்திலிருந்து 1998இல் 6.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

### நடைமுறைச் செலவினம்

நடைமுறைச் செலவினம், 1997இன் 5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1998இல் 8 சதவீதத்தால் ரூ.199,648 மில்லியனுக்கு அதிகரித்தது. மொத்தச் செலவினத்தின் சதவீதமொன்றாக நடைமுறைச் செலவினம் முன்னைய ஆண்டின் 78.6 சதவீதத்திலிருந்து 1998இல் 74.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வட்டிக் கொடுப்பனவுகள், நடைமுறை மாற்றல்கள் மற்றும் உதவிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி நடைமுறைச் செலவினத்தில் பெரும் அதிகரிப்புக்களைத் தவிர்க்க உதவியது. 1998இல் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.54.897 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. மொ.உ.உ.இன் விகிதமொன்றாக வட்டிக் கொடுப்பனவுகள் 1997இன் 6.2 சதவீதத்திலிருந்து 1998இல் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1998இல் நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் ரூ.46,984 மில்லியனாக விளங்கி 1997இன் 5.1 சதவீதத்திலிருந்து 1998இல் 4.6 சதவீதத்திற்கான வீழ்ச்சியொன்றினை எடுத்துக்காட்டின. பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய செலவினம் 13 சதவீதத்தால் அதிகரித்து, 1998இன் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 26 சதவீதத்திற்கு வகைகூறியது. மொ.உ.உ.இன் சதவீதமொன்றாக பாதுகாப்புச் செலவினம் 1997இன் அதே மட்டத்தில் 1998இலும் 5 சதவீதமளவில் மாறாதிருந்தது. இதேவேளையில், மத்திய மற்றும் மாகாண அரச ஊழியர்களின் சம்பளங்களும் ஏனைய பொருட்கள் பணிகளுக்காக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ஏற்படுத்தப்பட்ட செலவும், 1997இன் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998இல் 21 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

வரைபடம் 8.3
செலவின உள்ளமைப்பு



1998இல் மொத்த சம்பளப் பட்டியல் ரூ.53,880 மில்லியனுக்கு 21 சதவீதத்தால் அதிகரித்தது. 1997இலான அதிகரிப்பு 17 சதவீதம் ஆகும். மொ.உ.உ.இன் விகிதமாக சம்பளங்கள் முன்னைய ஆண்டின் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீதத்திற்கு அதிகரித்தன. சம்பளப் பட்டியலில் ஏற்பட்ட அதிகரிப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு ஆளணியினருக்கு வழங்கப்பட்ட படிகளாலும், 1995இன் சம்பள ஆணைக் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட சம்பள அதிகரிப்பின் இரண்டாம்கட்ட நடைமுறைப்படுத்தலினாலும் ஏற்பட்டதாகும்.

1998இல் நடைமுறைக்கு வந்த அரசதுறை ஊழியர்களுக்கான புதிய சம்பள அமைப்பு இரு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாம் கட்டத்தில், முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பின் 40 சதவீதம் 1997 சனவரியிலிருந்து அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டத்தில், 1998 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய எஞ்சிய 60 சதவீத அதிகரிப்பு மூலவளக் கட்டுப்பாடுகள் காரணமாக அலுவலர் தரங்களுக்கு ஏற்ப பிற்போடப்பட்டது. இதன்படி மாதாந்தம் ரூ.7,500இற்கு குறைவாகப் பெறும் பாதுகாப்புப் பணிகள் மற்றும் ஏனைய அரசதுறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு 1998 சனவரியிலிருந்து வழங்கப்பட்டது. இத்தொகைக்கு மேலதிகமாகப் பெறும் ஊழியர்களுக்கான எஞ்சிய அதிகரிப்பு 1998 யூலையிலிருந்து வழங்கப்பட்டது.

முன்னைய இரு ஆண்டுகளிலும் இறைப் பற்றாக் குறையைக் குறைப்பதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது டன் சார்பு ரீதியில் குறைவான பணவீக்க வீதமும் திருந்திய நாணய மற்றும் பணவீக்க முகாமையும் வட்டிச் சுமையைக் குறைப்பதற்கு உதவின. அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் உள்நாட்டுப்படு கடன் மீதான குறைவான வட்டிக் கொடுப்பனவுகள் காரணமாக ரூ.54,897 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. இது 1997இலிருந்த குறைந்த வட்டிவீதங்களால் ஏற்பட்டதாகும். ஆண்டிறுதியிலான மொத்த உள்நாட்டுப் படுகடனின் விகிதமாக உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 1997இன் 12.7 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. படுகடன் முகாமையில் ஏற்பட்ட முன்னேற்றம் குறிப்பாக, அரச பிணைகளை இடரற்ற சேமிப்புக் கருவிகளாக மக்களிடையே பிரபல்யப்படுத்துதலானது, வட்டிச் செலவுகளை மேலும் குறைப்பதற்கு உதவும். இறைப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான தேவைகளின் முக்கியத்துவம் இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் மீள வலியுறுத்தப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது.

1998இல் வெளிநின்ற திறைசேரி உண்டியல் இருப்புக்களில் காணப்பட்ட ரூ.5,000 மில்லியன்கொண்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிச் செலவினம் 1998இல் குறிப்பிடத்தக்க 31 சதவீதக் குறைப்பொன்றைப் பதிவுசெய்தது. திறைசேரி உண்டியல்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள், ஆண்டிறுதியின் திறைசேரி உண்டியல் இருப்பின் விகிதமாக 15.7 சதவீதத்திலிருந்து 1998இல் 10.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1997இல் ரூ.10,000 பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமை, 1998இல் வட்டிச் செலவினத்தை ரூ.350 மில்லியனால் குறைத்தது.

1998இல் ரூபாக்கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 10 சதவீதத்தால் ரூ.33,100 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் ரூபாக் கடன்களின் இருப்பில் (1997இல் ரூ.33,500 மில்லியனும், 1998இல் ரூ.11,000 மில்லியனும்) அதிகரிப்பொன்றையும், இவ்வாண்டில் ஆண்டுச் சராசரி ரூபாக் கடன் வட்டி வீதம் 12.6 சதவீதத்திலிருந்து 13.2 சதவீதத்திற்கு அதிகரித்தமையையும் பிரதிபலித்தது. கூடிய வட்டிவீதங்களான 15.0 - 16.0 சதவீதத்தைக் கொண்டிருந்த ரூபாக் கடன்களின் தீர்ப்பனவும் முன்கூட்டியே தீர்ப்பனவு செய்யும் விருப்பத் தேர்வின் கீழ் 11.0-12.25 சதவீதம்கொண்ட குறைந்த வட்டி வீதங்களுடனான புதிய ரூபாக் கடன்கள் அவற்றைப் பதிலீடு செய்தமையும், 1998இல் வட்டிச் செலவை ரூ.180 மில்லியனால் குறைத்தது. திறைசேரி முறிகளின் பேரிலான வட்டிக் கொடுப்பனவுகள் 1997இன் ரூ.327 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.2,100 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு, நிலையான வட்டி ரூபாக் கடன்களை பகுதியளவில் பதிலீடு செய்யும் திறைசேரி முறிகளின் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக விளங்கியது.

1998இல் வெளிநாட்டுப் படுகடன் இருப்பிலான 20 சதவீத அதிகரிப்புக்கு மத்தியிலும் வெளிநாட்டுப் படுகடனின் பேரிலான வட்டிச் செலவு 9 சதவீதத்தால் மட்டும் அதிகரித்து, ரூ.7,300 மில்லியனாக விளங்கியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான ஆண்டுச் சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டின் 1.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.6 சதவீதமாக விளங்கி, அவ்வாறான படுகடனின் சலுகை ரீதியிலான தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

1998இல் மொத்த நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைகளும் 3 சதவீதத்தால் ரூ.46,984 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், மொ.உ.உ.இன் விகிதமாக செலவினம் 1997இன் 5.1 சதவீதத்திலிருந்து 4.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சமுர்த்தி நன்மைபெறுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரிசீலிக்கும் முறை போன்ற அரசின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட

## அட்டவணை 8.3
## செலவினத்தினதும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலினதும் பொருளாதாரப் பகுப்பாய்வு(அ)

ரூபா மில்லியன்

| விடயம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1998 தற்காலிக மானவை | 1999 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **127,084** | **154,159** | **175,148** | **184,749** | **187,090** | **199,648** | **199,205** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 54,700 | 75,447 | 80,003 | 83,831 | 85,604 | 97,768 | 91,976 |
| சம்பளங்களும் கூலிகளும் | 29,309 | 34,909 | 38,332 | 44,677 | 47,855 | 53,880 | 54,292 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 25,391 | 40,538 | 41,671 | 39,154 | 37,749 | 43,888 | 37,684 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 38,031 | 38,225 | 48,923 | 55,246 | 55,367 | 54,897 | 59,780 |
| வெளிநாட்டு | 5,511 | 6,162 | 6,739 | 6,692 | 7,418 | 7,300 | 8,060 |
| உள்நாட்டு (அ) | 32,520 | 32,063 | 42,184 | 48,554 | 47,949 | 47,598 | 51,720 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 34,180 | 40,487 | 46,223 | 45,672 | 45,419 | 46,984 | 47,749 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 2,634 | 7,841 | 8,232 | 2,693 | 2,374 | 2,967 | 2486 |
| அரச நிறுவனங்களுக்கு | 1,976 | 2,182 | 2,284 | 2,657 | 5,381 | 4,320 | 6033 |
| அரச ஏனைய மட்டங்களுக்கு | 1,307 | 1,157 | 1,592 | 1,941 | 1,524 | 1,977 | 2103 |
| குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 28,263 | 29,307 | 34,114 | 38,381 | 36,140 | 37,719 | 37,127 |
| உணவு முத்திரை, உணவு உதவிக் கொடுப்பனவு ஏனையன | 4,654 | 1,799 | 591 | - | - | - | - |
| சனசவிய/சமுர்த்தி | 5,369 | 5,130 | 8,591 | 8,718 | 9,670 | 8,652 | 8374 |
| ஓய்வூதியங்கள் | 13,271 | 14,549 | 15,465 | 17,916 | 18,285 | 19,477 | 19321 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | 630 | 1,345 | 1,500 | 1,895 | 1,500 | 2,152 | 1500 |
| ஏனையவை | 4,339 | 6,484 | 7,967 | 9,852 | 6,685 | 6,438 | 7932 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு/நிகழக்கூடியது | - | - | - | - | 700 | - | -300 |
| **மூலதனச் செலவினம்** | **30,391** | **41,722** | **37,638** | **43,982** | **57,339** | **54,160** | **68,736** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 16,747 | 22,589 | 20,938 | 25,468 | 35,185 | 32,246 | 37,734 |
| மூலதன மாற்றல்கள் | 13,644 | 19,134 | 16,701 | 18,514 | 22,153 | 21,915 | 33,597 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 4,246 | 7,614 | 6,017 | 5,880 | 6,396 | 6,801 | 9828 |
| அரச நிறுவனங்களுக்கு | 8,433 | 10,446 | 9,603 | 11,041 | 13,980 | 13,285 | 19261 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 914 | 1,057 | 1,042 | 1,511 | 1,745 | 1,764 | 1975 |
| ஏனையவை | 51 | 17 | 39 | 83 | 32 | 65 | 2533 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு | - | - | - | | - | - | -2595 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | **13,289** | **7,602** | **5,873** | **6,366** | **10,656** | **14,370** | **15,322** |
| முற்பணக் கணக்குகள் | 2,462 | -1,580 | 630 | 1,226 | 500 | 2,784 | 500 |
| கடன் வழங்கல் | 10,064 | 11,087 | 8,335 | 7,278 | 13,658 | 14,117 | 15820 |
| மீளமைப்புச் செலவு | 3,739 | 3,191 | 90 | 2,193 | 1,500 | 3,688 | 3980 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் | -2,976 | -5,097 | -3,182 | -4,331 | -5,002 | -6,218 | -4978 |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **170,764** | **203,483** | **218,659** | **235,096** | **255,085** | **268,179** | **283,263** |

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1998 தற்காலிக மானவை | 1999 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **21.9** | **23.1** | **22.8** | **20.8** | **18.2** | **19.7** | **19.6** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 9.4 | 11.3 | 10.4 | 9.4 | 8.3 | 9.6 | 9.1 |
| சம்பளங்களும் கூலிகளும் | 5.1 | 5.2 | 5.0 | 5.0 | 4.7 | 5.3 | 5.4 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 4.4 | 6.1 | 5.4 | 4.4 | 3.7 | 4.3 | 3.7 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 6.6 | 5.7 | 6.4 | 6.2 | 5.4 | 5.4 | 5.9 |
| வெளிநாட்டு | 1.0 | 0.9 | 0.9 | 0.8 | 0.7 | 0.7 | 0.8 |
| உள்நாட்டு (அ) | 5.6 | 4.8 | 5.5 | 5.5 | 4.7 | 4.7 | 5.1 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 5.9 | 6.1 | 6.0 | 5.1 | 4.4 | 4.6 | 4.7 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 0.5 | 1.2 | 1.1 | 0.3 | 0.2 | 0.3 | 0.2 |
| அரச நிறுவனங்களுக்கு | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.5 | 0.4 | 0.6 |
| அரச ஏனைய மட்டங்களுக்கு | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 |
| குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 4.9 | 4.4 | 4.4 | 4.3 | 3.5 | 3.7 | 3.7 |
| உணவு முத்திரை, உணவு உதவிக் கொடுப்பனவு | 0.8 | 0.3 | 0.1 | - | - | - | - |
| சனசவிய/சமுர்த்தி | 0.9 | 0.8 | 1.1 | 1.0 | 0.9 | 0.8 | 0.8 |
| ஓய்வூதியங்கள் | 2.3 | 2.2 | 2.0 | 2.0 | 1.8 | 1.9 | 1.9 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | 0.1 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.2 | 0.1 |
| ஏனையவை | 0.7 | 1.0 | 1.0 | 1.1 | 0.6 | 0.7 | 0.8 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு/நிகழக்கூடியது | - | - | - | - | 0.1 | - | - |
| **மூலதனச் செலவினம்** | **5.2** | **6.2** | **4.9** | **4.9** | **5.6** | **5.3** | **6.8** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 2.9 | 3.4 | 2.7 | 2.9 | 3.4 | 3.2 | 3.7 |
| மூலதன மாற்றல்கள் | 2.4 | 2.9 | 2.2 | 2.1 | 2.2 | 2.2 | 3.3 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 0.7 | 1.1 | 0.8 | 0.7 | 0.6 | 0.7 | 1.0 |
| அரச நிறுவனங்களுக்கு | 1.5 | 1.6 | 1.3 | 1.2 | 1.4 | 1.3 | 1.9 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 0.2 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| ஏனையவை | - | - | - | - | - | - | 0.2 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கீடு | - | - | - | - | - | - | -0.3 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | **2.3** | **1.1** | **0.8** | **0.7** | **1.0** | **1.4** | **1.5** |
| முற்பணக் கணக்குகள் | 0.4 | -0.2 | 0.1 | 0.1 | - | 0.3 | - |
| கடன் வழங்கல் | 1.7 | 1.7 | 1.1 | 0.8 | 1.3 | 1.4 | 1.6 |
| மீளமைப்புச் செலவு | 0.6 | 0.5 | 0.0 | 0.2 | 0.1 | 0.4 | 0.4 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் | -0.5 | -0.8 | -0.4 | -0.5 | -0.5 | -0.6 | -0.5 |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **29.5** | **30.5** | **28.5** | **26.4** | **24.9** | **26.4** | **27.9** |

(அ) 1996 அரச நிதி புள்ளி விபரவியல் வழிகாட்டிக்கமைய, தேறிய கடன் வழங்கல் விடயமாகப் பயன்படுத்தப்பட்ட தனியார்மயமாக்கல் பெறுகைகள் வடிவமைப்பிலிருந்து அகற்றப்பட்டுள்ளது.

(ஆ) 1996 இலிருந்து இரு அரச வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வழங்கப்பட்ட நீண்டகாலப் பிணைகளில் வட்டிக் கொடுப்பனவும் உள்ளடக்கப்படுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

முயற்சிகள் 1998இல் நன்மை பெறுவோரின் எண்ணிக்கையை 44,671ஆல் குறைப்பதற்கு இட்டுச் சென்றதுடன், குடும்ப அலகுகளுக்கான மாற்றல்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் உதவின.

ஓய்வூதியங்கள், சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழான உதவி, வளமாக்கி உதவிக் கொடுப்பனவு மற்றும் ஏனைய நலன்புரிக் கொடுப்பனவுகளை முக்கியமாக உள்ளடக்கியுள்ள குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் 1998இல் ரூ.662 மில்லியனால் ரூ.37,719 மில்லியனுக்கு அதிகரித்தன. இதன்படி, மொ.உ.உ. விகிதத்திற்கான குடும்ப அலகு மாற்றல்கள் 1997இன் 4.3 சதவீதத்திலிருந்து 1998இல் 3.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1998இல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பேரிலான செலவுகள் 9 சதவீதத்தால் ரூ.19.477 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு, 1998 இறுதியில் 5,705 புதிய ஓய்வூதியக்காரர்கள் இணைந்தமையும் 1995இல் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் மீதான நிலுவைகள் வழங்கப்பட்டமையுமே காரணமாக விளங்கியது. மொ.உ.உ.இன் சதவீதமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2 சதவீதத்திலிருந்து 1998இல் 1.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1998இல் சமுர்த்தி நன்மைகள் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,973,183ஆக விளங்குகையில் சமுர்த்திக் கொடுப்பனவுகள் 1998இல் ரூ.7,963 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பேரிலான மொத்த மாற்றல் கொடுப்பனவுகளும் 1997இன் ரூ.8,718 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.8,652 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. 1998இல் வளமாக்கி உதவுதொகைக் கொடுப்பனவுகள் ரூ.2,152 மில்லியனுக்கு 14 சதவீதத்தால் அதிகரித்தன. யூரியாவின் பன்னாட்டு விலைகள் 1997இன் மெற்றிக் தொன் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 182இலிருந்து 1998இன் மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 133இற்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்தமையின் மத்தியிலும் அதிகளவில் செலவு ஏற்பட்டமையானது யூரியாப் பயன்பாட்டில் ஏற்பட்ட 4 சதவீத அதிகரிப்பு மற்றும் 1997 நிலுவைகளின் தீர்ப்பனவு ஆகியவற்றின் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும். அகதிகளுக்கான கொடுப்பனவுகள், பாடசாலைச் சீருடைகள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி உதவிக் கொடுப்பனவுகள் சார்பிலான கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ள குடும்ப அலகுகளுக்கான ஏனைய மாற்றல்கள் 1998இல் ரூ.7,438 மில்லியனாக விளங்கியது. அகதிகள் பேரிலான கொடுப்பனவுகள் ரூ.2,117 மில்லியனாக விளங்கியது. பாடசாலைச் சீருடை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பாடசாலைப் புத்தக நிகழ்ச்சித் திட்டத்தின் செலவு 1998இல் ரூ.1,736 மில்லியனாக விளங்கியது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான உலர் உணவுகளின் பகிர்ந்தளிப்பு தொடர்ந்து இடம்பெற்றது. 1998இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழான பெறுநர்கள் 113,558ஆகவும் மொத்தச் செலவு ரூ.1,054 மில்லியனாகவும் விளங்கியது.

நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் 1997இன் ரூ.5,350 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.7,287 மில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வாண்டில் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் 10 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்திருக்கையில், அரச நிறுவனங்களுக்கான மாற்றல் கொடுப்பனவுகள் 1998இல் 63 சதவீதத்தால் அதிகரித்து ரூ.4,320 மில்லியனாக விளங்கின. மாற்றல் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் இந் நிறுவனங்களில் புதிய சம்பள அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதால் ஏற்பட்டதாகும். எனினும், மகாவலி மேலாண்மைச் சபைகளின் மாற்றல்களின் முக்கிய பகுதியை மூலதனத்திலிருந்து நடைமுறைக்கு மீள்பகுப்புச் செய்யப்பட்டமையும் அரச நிறுவனங்களுக்கான அவ்வாறான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்குக் காரணமாகும். இதேவேளை, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் ஓய்வூதியங்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய நிலுவைக் கொடுப்பனவுகளும் 1997இன் ரூ.726 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.1,324 மில்லியனுக்கு அதிகரித்த கூட்டுத்தாபனங்களுக்கான (இலங்கை புகையிரதப் பகுதி மற்றும் அஞ்சல் திணைக்களம் நீங்கலாக) மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. பன்னாட்டுச் சந்தையில் கோதுமைத் தானியத்தின் ஆண்டுச் சராசரி விலை 1997இன் மெற்றிக் தொன் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 175இலிருந்து 1998இல் மெற்றிக் தொன்னொன்றுக்கு (கொ.கா.க.) ஐ.அ.டொலர் 143இற்கு பெருமளவில் குறைந்தமை, 1998இல் கோதுமைமா உதவுதொகையை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அரசுக்கு உதவியதுடன், கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பை மிதமாக்கியது. உள்ளூராட்சிச் சபைகளுக்கான மாற்றல் கொடுப்பனவுகளும் அதிகரித்த சம்பளங்கள் மற்றும் கூலிகள் காரணமாக ரூ.1,977 மில்லியனுக்கு 2 சதவீதத்தால் அதிகரித்தன.

அதிகரித்த கூலிப்பட்டியல்கள் மற்றும் குறைந்த கட்டணங்கள் காரணமாக இலங்கை புகையிரதப் பகுதி மற்றும் அஞ்சல் திணைக்களம் ஆகியவற்றின் நடைமுறைத் தொழிற்பாட்டு இழப்புக்கள் ரூ.1,643 மில்லியனுக்கு அதிகரித்தன. 1999 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட 25 சதவீதத்தாலான புகையிரதக் கட்டண அதிகரிப்பு இறுதியில் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனினும், அஞ்சற் கட்டணங்கள் 1998 திசெம்பரிலிருந்து 40 சதவீதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபன மயப்படுத்துவதன் மூலம் அஞ்சல் திணைக்களத்தின் வர்த்தக ரீதியாக நிலைத்திருக்

கக்கூடிய தன்மையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. டுகையிரதக் கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தமும் டுகையிரத் திணைக்களத்தின் மீள் அமைப்பு முறையும் நீண்ட காலத்துக்குமுன்பே செய்யப்பட்டிருக்க வேண்டியவையாகும்.

அரச அமைச்சுக்களினதும் மற்றும் திணைக்களங்களினதும் (பாதுகாப்பு நீங்கலாக) நாளாந்த தொழிற்பாட்டுச் செலவினத்தைக் கொண்டிருக்கும் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் 38 சதவீதத்தால் ரூ.15,930 மில்லியனுக்கு அதிகரித்தது.

தொழிற்பாட்டு பகுப்பாய்வு நியதிகளில், சமூகப் பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் 1997இன் மொ.உ.உ.இன் 6.7 சதவீதத்திலிருந்து 1998இல் மொ.உ.உ.இன் 6.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சமூகப் பணிகள் மீதான செலவினம் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 32 சதவீதத்திற்கு வகைகூறியது. கல்வியும் நலத்துறையும், சமூகப் பணிகள் மீதான மொத்தச் செலவில் ஏறக்குறைய 50 சதவீதத்தைக் கொண்டிருந்தன.

இவ்வாண்டில் பொருளாதாரப் பணிகள் மீதான நடைமுறைச் செலவினம் 42 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டி ரூ.10,547 மில்லியனாக விளங்கியது. 1998இல் போக்குவரத்தும் தொடர்பூட்டலும், வேளாண்மையும் நீர்ப்பாசனமும், வலுவும் நீர் வழங்கலும் ஆகியவற்றின் மீதான செலவினம் கணிசமான அதிகரிப்புக்களை எடுத்துக்காட்டியது. பொதுவான அரச பணிகள் மீதான செலவு 1998இல் ரூ.66,158 மில்லியனுக்கு 12 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது, பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு மீதான செலவினம் ரூ.50,960 மில்லியனாக விளங்கி பொதுவான அரச பணிகள் மீதான செலவினத்தின் 77 சதவீதத்திற்கு வகைகூறியது.

## அரச முதலீடு

மூலதனச் செலவினத்தையும் அரச தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல்களையும் உள்ளடக்கிய அரச முதலீடு 1998இல் 33 சதவீதம்கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்து ரூ.68,277 மில்லியனாக விளங்கியது. நிலையான சொத்துக்களின் அமைப்பிற்கும் அபிவிருத்திக்குமாக அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட செலவு 1998இல் 27 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து ரூ.32,246 மில்லியனாக விளங்கியது. வர்த்தக ரீதியிலான அரச கூட்டுத்தாபனங்களும் சபைகளுக்குமான மூலதன மாற்றல்கள் 16 சதவீதத்தால் ரூ.6,801 மில்லியனுக்கு அதிகரித்தன. இம் மாற்றல்களின் 75 சதவீதத்திற்கும் மேலானவை தேசிய நீர் வடிகால் சபை (ரூ.2,390 மில்லியன்), இலங்கை மின்சபை (ரூ.432 மில்லியன்), நிலமீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (ரூ.1,552 மில்லியன்), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ.867 மில்லியன்) என்பனவற்றைச் சென்றடைந்தன. இதேவேளை, வர்த்தக ரீதியல்லாத அரச நிறுவனங்களுக்கான மூலதன மாற்றல்கள் 1998இல் 20 சதவீதத்தால் ரூ.13,285 மில்லியனுக்கு அதிகரித்தன. இம் மூலங்களின் முக்கிய பயன்பாட்டாளர்களாக வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ.7,479 மில்லியன்), மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ.1,049 மில்லியன்), நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ.492 மில்லியன்), வடக்கின் மீளமைப்பு மற்றும் புத்தாக்க மேலாண்மைச் சபை (ரூ.996 மில்லியன்), முதலீட்டுச்சபை (ரூ.326 மில்லியன்) என்பன விளங்கின.

அரச தொழில் முயற்சிகளுக்கு வெளிநாட்டு மூலவளங்களை ஒருமுகப்படுத்தும் அரசின் கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் 1998இல் ரூ.14,117 மில்லியனுக்கு இரு மடங்கு அதிகரிப்பைக் காட்டியது. 1998 வரவு செலவுத் திட்டத்தின் இலக்கு ரூ.13,658 மில்லியன் ஆகும். இலங்கை மின்சபை ரூ.5,648 மில்லியனை வலு உருவாக்கம் மற்றும் கடத்தல் செயற்றிட்டங்களுக்கும் பயன்படுத்தியிருக்கையில் இலங்கை துறைமுக மேலாண்மைச்சபைக்கான கடன் வழங்கல் ரூ.3,356 மில்லியனாக விளங்கியது. எனினும், ஸ்ரீ லங்கா ரெலிகொம் (ரூ.2,426 மில்லியன்) செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக அதன் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 71 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக இருந்தது.

பொருளாதாரப் பணிகளுக்கான அரச முதலீடு 38 சதவீதத்தால் ரூ.44,677 மில்லியனுக்கு (மொ.உ.உ.இன் 4.4 சதவீதம்) அதிகரித்தது. இம் முதலீடுகள் போக்குவரத்தும் தொடர்பூட்டலும் (ரூ.18,908 மில்லியன்), வலுவும் நீர் வழங்கலும் (ரூ.8,804 மில்லியன்), வேளாண்மையும் நீர்ப்பாசனமும் (ரூ.6,018 மில்லியன்) ஆகிய துறைகளில் பெருமளவில் இடப்பட்டதுடன் பொருளாதாரப் பணிகளிலான மொத்த முதலீட்டில், 76 சதவீதத்திற்கு வகைகூறின. வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபையினூடாக வீதி அபிவிருத்தி வலையமைப்புக்கான செலவு ரூ.7,479 மில்லியனாக விளங்கிய வேளையில், புகையிரதப் பகுதி, துறைமுகம் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் அபிவிருத்திக்காக ரூ.9,239 மில்லியன்கொண்ட நிதியங்கள் வழங்கப்பட்டன. இலங்கை மின்சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக வலு மற்றும் நீர் வழங்கல் துறைகளிலான முதலீடுகள் 1998இல் 29 சதவீதத்தால் ரூ.8,804 மில்லியனுக்கு அதிகரித்தன. 1998இல் இவ்விரு நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்ட செலவு, வலு மற்றும் நீர் வழங்கல் துறைகளிலான மொத்த அரச முதலீட்டின் 95 சதவீதத்திற்கும் கூடியதொகையொன்றுக்கு வகைகூறியது.

## அட்டவணை 8.4
## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

ரூபா மில்லியன்

| விடயம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1998 தற்காலிக மானவை | 1999 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | | | | | | | |
| **அரச பொதுப் பணிகள்** | **30,444** | **47,888** | **53,915** | **58,926** | **56,948** | **66,158** | **58,070** |
| சிவில் நிருவாகம் | 4,637 | 6,562 | 10,207 | 13,956 | 12,577 | 15,196 | 14,721 |
| பாதுகாப்பு | 19,415 | 35,186 | 38,117 | 37,062 | 36,457 | 42,496 | 35,619 |
| பொது ஒழுங்கும் பாதுகாப்பும் | 6,392 | 6,140 | 5,591 | 7,908 | 7,914 | 8,466 | 7,730 |
| **சமூகப் பணிகள்** | **47,656** | **57,648** | **59,294** | **59,742** | **64,356** | **63,595** | **66,763** |
| கல்வி | 14,836 | 15,784 | 16,018 | 17,757 | 21,920 | 20,582 | 22,231 |
| சுகாதாரம் | 7,666 | 8,818 | 9,260 | 9,581 | 10,269 | 10,089 | 10,651 |
| நலன்புரி | 24,560 | 32,106 | 32,824 | 31,251 | 30,858 | 31,472 | 31,168 |
| வீடமைப்பு | - | - | - | - | - | - | |
| சனசமூகப் பணிகள் | 593 | 941 | 1,191 | 1,154 | 1,309 | 1,451 | 2,713- |
| **பொருளாதாரப் பணிகள்** | **6,195** | **8,078** | **8,807** | **7,418** | **10,756** | **10,547** | **9,862** |
| வேளாண்மையும், நீர்ப்பாசனமும் | 2,506 | 3,826 | 3,894 | 3,723 | 4,969 | 5,444 | 4,963 |
| மீன்பிடி | 99 | 105 | 148 | 156 | 350 | 175 | 184 |
| தயாரிப்பும் சுரங்க அகழ்வும் | 351 | 252 | 282 | 599 | 767 | 325 | 436 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 518 | 990 | 590 | 486 | 874 | 757 | 876 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 2,024 | 2,014 | 2,423 | 1,674 | 2,672 | 2,934 | 2,060 |
| வர்த்தகமும் வாணிபமும் | 72 | 172 | 891 | 159 | 243 | 167 | 306 |
| ஏனையவை | 625 | 719 | 580 | 622 | 880 | 745 | 1,037 |
| **ஏனையவை** | **42,789** | **40,546** | **53,132** | **58,662** | **54,332** | **59,348** | **64,811** |
| அதில்: வட்டி | 38,031 | 38,687 | 48,923 | 55,246 | 55,368 | 54,897 | 59,780 |
| **குறைச் செலவுக்கான ஒதுக்கீடு** | **-** | **-** | **-** | | **700** | **-** | **-300** |
| **மொத்த நடைமுறைச் செலவு** | **127,084** | **154,159** | **175,149** | **184,749** | **187,091** | **199,648** | **199,206** |
| **மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | | | | | | | |
| **அரச பொதுப் பணிகள்** | **2,390** | **5,776** | **3,161** | **3,442** | **7,527** | **6,243** | **8,149** |
| சிவில் நிருவாகம் | 1,753 | 3,962 | 1,935 | 3,442 | 7,527 | 6,243 | 8,149 |
| பொது ஒழுங்கும் பாதுகாப்பும் | 637 | 1,814 | 1,226 | - | - | - | - |
| **சமூகப் பணிகள்** | **7,677** | **9,854** | **10,322** | **11,552** | **15,059** | **15528** | **16969** |
| கல்வி | 2877 | 3124 | 4384 | 4592 | 5957 | 6112 | 7304 |
| நலம் | 1518.9 | 2134 | 2538 | 2554 | 4308 | 4330 | 4774 |
| நலன்புரி | 1681 | 1690 | 868 | 751 | 396 | 967 | 141 |
| வீடமைப்பு | 802 | 1610 | 1174 | 792 | 1647 | 1314 | 1514 |
| சனசமூகப் பணிகள் | 798 | 1297 | 1359 | 2863 | 2751 | 2804 | 3236 |
| **பொருளாதாரப் பணிகள்** | **29304** | **36106** | **31409** | **32479** | **46633** | **44677** | **57526** |
| வேளாண்மையும், நீர்ப்பாசனமும் | 5179 | 6060 | 4718 | 3780 | 6730 | 6018 | 9726 |
| அதில் மகாவலி செயற்றிட்டம் | 2598 | 3090 | 1940 | 1626 | 1265 | 1049 | 2127 |
| மீன்பிடி | 368 | 361 | 311 | 480 | 773 | 562 | 876 |
| தயாரிப்பும் சுரங்க அகழ்வும் | 22 | 250 | 356 | 1442 | 2167 | 2191 | 836 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 5518 | 5003 | 6035 | 6816 | 10203 | 8804 | 12627 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 14522 | 18888 | 12636 | 12946 | 20536 | 18907.5 | 23013 |
| வர்த்தகமும் வாணிபமும் | 182 | 20 | 105 | 182 | 909 | 230 | 394 |
| ஏனையவை | 3513 | 5524 | 7247 | 6835 | 5316 | 7965 | 10055 |
| **ஏனையவை** | **1084** | **1074** | **1081** | **3787** | **1778** | **1829** | **4508** |
| **குறைச் செலவுக்கான ஒதுக்கீடு** | **-** | **-** | **-** | | **-** | **-** | **-2595** |
| **மொத்த நடைமுறைச் செலவும் கடன் வழங்கலும்** | **40455** | **52810** | **45973** | **51260** | **70998** | **68277** | **84556** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1998இல் சமூகப் பணிகளின் பேரிலான மூலதனச் செலவு 34 சதவீதத்தால் ரூ.15,528 மில்லியனுக்கு அதிகரித்தது. நலம் (ரூ.4,330 மில்லியன்), கல்வி (ரூ.6,112 மில்லியன்), சன சமூகப் பணிகள் (ரூ.2,804 மில்லியன்), வீடமைப்பு (ரூ.1,314 மில்லியன்) ஆகிய துறைகளிலான முதலீடுகள் சமூகப் பணிகளிலான மொத்தச் செலவில் 90 சதவீதத்திற்கும் கூடியதாக வகைகூறின.

அரச தொழில் முயற்சிகள் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.3,688 மில்லியன்கொண்ட தொகை ஒன்று 1998இல் செலவிடப்பட்டது. மீளமைப்புச் செலவினத்தின் பெரும் பங்கு மகாவலி மேலாண்மைச் சபையால் அதன் ஆளணியைக் குறைப்பதற்கும், புடவைத் துறையின் மீளமைப்புக்குமென வழங்கப்பட்டது. அரச தொழில் முயற்சிகளால் கடன் மீள் கொடுப்பனவுகளின் பேரிலான நிதியங்களின் மீள் பாய்ச்சல்கள் ரூ.6,218 மில்லியனாக விளங்கின. இவை இலங்கை மின்சபை (ரூ.2,137 மில்லியன்), ஸ்ரீ லங்கா ரெலிகொம் (ரூ.1,162 மில்லியன்), டிஎப்சிசி வங்கி (ரூ.562 மில்லியன்), துறைமுக அதிகாரசபை (ரூ.476 மில்லியன்) என்பனவற்றிலிருந்து பெறப்பட்டதுடன், மொத்த மீள் கொடுப்பனவுகளில் இவை 92 சதவீதத்திற்கு வகைகூறின. இதேவேளை, முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலான தொழிற்பாடுகள் வரவு செலவுத் திட்ட மதிப்பீடான ரூ.500 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2,784 மில்லியன் கொண்ட ஓர் தேறிய வெளிப்பாய்ச்சலை விளைவித்தன. அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு மற்றும் வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வீதக் குறைப்பு காரணமாக அரசதுறை ஊழியர்களின் கூடிய கடன்படும் இயலளவு முற்பணக் கணக்கினூடாக அதிகரித்த கடன்பாடுகளுக்கு இட்டுச்சென்றது.

## 8.5. மாகாண சபைகள்

மாகாண சபைகளின் அரசிறைகள் 11 சதவீதத்தால் ரூ.6,002 மில்லியனுக்கு அதிகரித்து அவற்றின் மூலவளத் தேவையின் 22 சதவீதத்தை ஈடுசெய்தன. அவற்றின் செலவினங்கள் 1998இல் 14 சதவீதத்தால் ரூ.26,736 மில்லியனுக்கு அதிகரித்தன. 1998இல் மாகாண சபைகளின் ஒன்றுசேர்ந்த மொத்தப் பற்றாக்குறை 1997இன் பற்றாக்குறையான ரூ.18,060 மில்லியனைவிட ரூ.20,734 மில்லியனுக்கு அதிகரித்துக் காணப்பட்டது. இப்பற்றாக்குறையானது மத்திய அரசிடமிருந்தான தொகுதிக் கொடைகள் தேர்வு அடிப்படையிலான கொடைகள், பொருத்தப்பாட்டுக் கொடைகள் மூலமாக நிதியிடப்பட்டது.

### அரசிறை

மாகாண சபைகளின் முக்கிய அரசிறை மூலங்களாக மொத்த விற்பனை வரிகள், உரிமக் கட்டணங்கள், முத்திரைத் தீர்வைகள் என்பன விளங்கின. மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை வியாபாரத்தில் விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில், 1998இல் மொத்த விற்பனை வரிச் சேகரிப்புக்கள் 9 சதவீதத்தால் ரூ.2,980 மில்லியனுக்கு அதிகரித்து மொத்தத்தின் 50 சதவீதத்திற்கு வகைகூறின. உரிமக் கட்டணங்களிலிருந்தான வருவாய்கள் 13 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு, ஊர்திகளின் பதிவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு முக்கிய காரணமாக விளங்கியது. இவ்வாண்டில் சொத்து கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியில் அதிகரிப்பொன்றைப் பிரதிபலிக்கும் வகையில் முத்திரைத் தீர்வையிலிருந்தான அரசிறைகள் ரூ.1,267 மில்லியனாக விளங்கி, 21 சதவீதம்கொண்ட ஓர் அதிகரிப்பைக் காட்டின. 1998இல் முத்திரைத் தீர்வைகள் அரசிறையின் 21 சதவீதத்திற்கு வகைகூறின. 1998இல் நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் கட்டணங்களை உள்ளடக்கிய விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் 18 சதவீதத்தால் ரூ.481 மில்லியனுக்கு அதிகரித்தன.

மேல் மாகாணசபை 1998இல் ரூ.3,981 மில்லியனைத் திரட்டியதுடன் மொத்த மாகாணசபை வருவாய்களின் 66 சதவீதத்துக்கு வகைகூறுகையில், மத்திய தென் மற்றும் வடமேல் மாகாணங்கள் ஒவ்வொன்றும் 8 சதவீதத்திற்கு வகைகூறின.

### செலவினம்

#### நடைமுறைச் செலவினம்

1997ஐப் போலவே, நடைமுறைச் செலவினம் ரூ.25,230 மில்லியனாக விளங்கி மொத்த செலவினத்தின் 94 சதவீதத்திற்கு வகைகூறியது. 1997இன் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் செலவினத்தில் 14 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. இது முழுமையாக ரூ.19,744 மில்லியனுக்கு 16 சதவீதத்தால் அதிகரித்த ஆளணி ஊதியச் செலவினால் ஏற்பட்டதாகும். 1997 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பின் இரண்டாம் கட்ட நடைமுறைப்படுத்தல் அதிகரித்த சம்பளப் பட்டியலுக்கான முக்கிய காரணமாக விளங்கியது. தொழிற்பாட்டு ரீதியில், கல்வி (13,507 மில்லியன்), நலத்துறை (ரூ.3,737 மில்லியன்) மற்றும் பிரதேச நிருவாகம் (ரூ.651 மில்லியன்) என்பன 1998இன் மொத்த ஆளணி ஊதியங்களின் 92 சதவீதத்திற்கு வகைகூறின. ஏனைய மீண்டெழும் செலவினங்களான பயணம், வழங்கல்கள், ஒப்பந்த அடிப்படையிலான பணிகள் மாற்றல்கள் போன்றவை முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன.

கல்வி, நலத்துறை மற்றும் சமூக நடவடிக்கைகளை உள்ளடக்கிய சமூகப் பணிகள் மீதான செலவினம் 14 சதவீதத்தால் அதிகரித்து ரூ.21,787 மில்லியனாக விளங்கி மொத்த மீண்டெழும் செலவினத்தின் 86

சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவேளை, மாகாண நிருவாகம் மற்றும் சமூகப் பணிகள் பேரிலான செலவு முறையே 22 சதவிதத்தாலும், 14 சதவீதத்தாலும் ரூ.2,377 மில்லியனுக்கும், ரூ.1,067 மில்லியனுக்கும் வளர்ச்சியடைந்தன.

மேல் மாகாண சபையின் நடைமுறைச் செலவினம் ரூ.5,687 மில்லியனாக விளங்கி, அனைத்து மாகாண சபைகளினதும் மொத்த நடைமுறைச் செலவினத்தின் ஆகக்கூடிய பங்கான 23 சதவீதத்திற்கு வகைகூறியது. அடுத்த பெரும் பங்கான 14 சதவீதத்திற்குப் பொறுப்பாக மத்திய மாகாண சபை விளங்குகையில் ஏனைய மாகாண சபைகள் ஒவ்வொன்றும் 1998இன் மொத்த நடைமுறைச் செலவினத்தின் 11 சதவீதத்திற்கு வகைகூறின.

### மூலதனச் செலவினம்

மாகாண சபைகளின் மூலதன செலவு நிகழ்ச்சித் திட்டம் 1998இல் வீழ்ச்சியடைந்தது. கருவிகளின் செலவு, காணிகளை மேம்படுத்துதல் மற்றும் அமைப்புச் செலவு, மூலதன மாற்றல்களும் உதவுதொகைகளும் மற்றும் மூலதனச் சொத்துக்களின் பேணல் என்பனவற்றை உள்ளடக்கிய மூலதனச் செலவினம் ரூ.1,507 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உயர் வளர்ச்சியான 18 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம்கொண்ட மிதமான அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. மூலதன நிகழ்ச்சித் திட்டத்திலான மெதுவான வளர்ச்சி மூலவளத் தடைகளால் ஏற்பட்ட தாகும். தொடர்பான அமைச்சுக்களின் நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தேவையான நிதியங்களுடன் மூலதனச் செலவினம் சார்ந்த சில வேலைகள் மாகாணசபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**வரைபடம் 8.4**
**மாகாண சபைகளின் செயலாற்றம்-1998**




### மத்திய அரசின் மாற்றல்கள்

1998இல் மாகாணசபைகள், 1997இன் பற்றாக் குறையான ரூ.18,060 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.20,734 மில்லியன் கொண்ட மொத்தப் பற்றாக் குறையைக் கொண்டிருந்தன. 1998இன் நடைமுறைச் செலவினத் தேவைகளை எதிர்கொள்வதற்காக மத்திய அரசு ரூ.19,194 மில்லியன்கொண்ட ஒரு தொகுதிக் கொடையை வழங்கியது. மொத்தக் கொடைகளில் தொகுதிக் கொடை 95 சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவேளை, 1998இல் மூலதனச் செலவினத்திற்கான எஞ்சிய நிதித் தேவைகள் ரூ.1,163 மில்லியன்கொண்ட தேர்வு முறையிலான கொடைகளுடாகவும், ரூ.237 மில்லியன் கொண்ட பொருத்தப்பாட்டுக் கொடைகளுடாகவும் வழங்கப்பட்டது.

**அட்டவணை 8.5**
**மாகாண சபைகளுக்கான வரவு செலவுத் திட்ட வெளிப்பாடு**

ரூபா மில்லியன்

| விடயம் | 1995 | 1996 | 1997 | 1998(அ) |
|---|---|---|---|---|
| **1. மொத்த அரசிறை** | **4,440** | **4,884** | **5,395** | **6,002** |
| 1.1 உற்பத்தி மற்றும் செலவினம் | 3.181 | 3.416 | 3,744 | 4,114 |
| மீதான வரிகள் | 2.335 | 2.464 | 2.734 | 2,980 |
| புரள்வு வரிகள் | 840 | 946 | 1.000 | 1,127 |
| உரிமக் கட்டணங்கள் | 6 | 6 | 10 | 8 |
| ஏனைய வரிகள் | | | | |
| 1.2 இலாபங்களும் பங்கிலாபங்களும் | 68 | 67 | 175 | 129 |
| 1.3 விற்பனைகளும் கட்டணங்களும் | 317 | 355 | 408 | 481 |
| 1.4 முத்திரைத் தீர்வை | 867 | 1.036 | 1.051 | 1267 |
| 1.5 ஏனையவை | 7 | 10 | 17 | 11 |
| **2. மொத்தச் செலவினம்** | **20,852** | **22,128** | **23,455** | **26,736** |
| 2.1 நடைமுறைச் செலவினம் | 19.795 | 20.941 | 22.055 | 25,230 |
| தொழிற்பாட்டு அடிப்படையில் | 19.795 | 20,941 | 22.055 | 25,230 |
| மாகாண நிருவாகம் | 2.067 | 1,942 | 1,941 | 2,377 |
| பொருளாதாரப் பணிகள் | 755 | 834 | 939 | 1067 |
| சமூகப் பணிகள் | 16,973 | 18.166 | 19.175 | 21,787 |
| பொருளாதார அடிப்படையில் | 19,795 | 20,941 | 22.055 | 25,230 |
| தனியார் ஊதியங்கள் | 16.031 | 16,263 | 17.067 | 19,744 |
| ஏனைய | 3.765 | 4.679 | 4.988 | 5486 |
| 2.2 மூலதனச் செலவினம் | 1.057 | 1.187 | 1.400 | 1.507 |
| மூலதனப் பொருட்களின் கையேற்பு | 594 | 757 | 729 | 773 |
| மூலதன மாற்றல்கள் | 66 | 53 | 55 | 75 |
| ஏனைய | 397 | 377 | 616 | 658 |
| **3. நிதியிடல்** | **15,288** | **16,873** | **18,348** | **20,594** |
| 3.1 மொத்த கொடைகள் | 14.066 | 15.831 | 16.855 | 19.194 |
| 3.2 தேர்வு அடிப்படையிலான கொடைகள் | 897 | 800 | 1.168 | 1.163 |
| 3.3 குறை நிரப்புக் கொடைகள் | 325 | 242 | 325 | 237 |

(அ) தற்காலிகம்    மூலங்கள்: மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## 8.6. அரச தொழில் முயற்சி சீரமைப்புக்கள்

சில முக்கிய அரச தொழில் முயற்சிகளான வரையறுக்கப்பட்ட எயர்லங்கா, பெருந்தோட்டக் கம்பனிகள், வரையறுக்கப்பட்ட ஒறியன்ற் லங்கா என்பவற்றின் பங்குகளை உரிமை மாற்றல் செய்ததுடன் 1998இலும் அரச தொழில் முயற்சி சீரமைப்புக்கள் தொடர்ந்தன. எனினும், உலகளாவிய பொருளாதாரச் சூழலில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் நலிவடைந்த பங்குச்சந்தை காரணமாக செயல்முறையில் மெதுவான போக்கொன்று காணப்பட்டது. இப் பங்குகளின்

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கள் 1998இல் வரவு செலவுத் திட்டத்தில் இலக்கான ரூ.8,000 மில்லியன் ஒப்பிடுகையில் ரூ.4,387 மில்லியனாக விளங்கியது.

10 ஆண்டு முகாமைத்துவ ஒப்பந்தத்துடன் எயர் லங்காவின் 40 சதவீதப் பங்குகள் உரிமை மாற்றப் பட்டமை 1998இல் முடிவடைந்த தனிப்பெரும் தனியார் மயமாக்கல் நடவடிக்கையாகும். எயர் லங்கா பங்குகளின் மொத்தம் 40 சதவீதத்திற்கான கொடைமுனைவு ஐ.அ.டொலர் 70 மில்லியனாக விளங்குகையில், 1998இல் 26 சதவீதப் பங்குகள் ஐ.அ.டொலர் 45 மில்லியனுக்கு (ரூ.2,816 மில்லியன்) விற்கப்பட்டன. ஐ.அ.டொலர் 25 மில்லியன் கொண்ட எஞ்சிய 14 சதவீதப் பங்கு திசெம்பர் 2000இற்கு முன்பாக மாற்றப்படவிருக்கிறது. எயர் லங்கா மீளமைப்பு மற்றும் மீள்தொகுதியிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1999இலும், 2000இலும் எயர் லங்கா வானூர்தித் தொகுதியை நவீனமயப்படுத்துவதற்காக ஐ.அ.டொலர் 600 மில்லின் கொண்ட தொகை முதலீடு செய்யப்படவிருக்கிறது. இம் முதலீட்டுக்குத் தேவையான மூலவளங்கள் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட மதுல்சீமை பெருந்தோட்டம், வரையறுக்கப்பட்ட கடுகஸ்தன்ன பெருந்தோட்டம், வரையறுக்கப்பட்ட பலாங்கொடை பெருந்தோட்டம், வரையறுக்கப்பட்ட உடபுசல்லாவை பெருந்தோட்டம், வரையறுக்கப்பட்ட மல்வத்தை பெருந்தோட்டம் ஆகிய ஐந்து பெருந்தோட்டக் கம்பனிகள் ஒவ்வொன்றினதும் 20 சதவீதப் பங்குகளின் உரிமை மாற்றலானது 1998இன் பொதுமக்கள் பங்கு வழங்கல் மூலமாக வழங்கப்பட்டு ரூ.232 மில்லியன் வருவாயாகப் பெறப்பட்டது. மேலும், வரையறுக்கப்பட்ட வட்டவளை பெருந்தோட்டம், வரையறுக்கப்பட்ட மஸ்கெலியா பெருந்தோட்டம், வரையறுக்கப்பட்ட பலாங்கொடை பெருந்தோட்டம் ஆகிய மூன்று பெருந்தோட்டக் கம்பனிகள் அரசிடமுள்ள அவற்றின் பங்குகளின் 19 சதவீதத்தை கொழும்பு பங்குச் சந்தையில் கூடிய விலை கோரியவர்களுக்கு மாற்றியதுடன், 1998இல் அரசின் அரசிறைக்கு ரூ.557 மில்லியனைப் பெற்றுக்கொடுத்தது. எனினும், 1998இல் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு இலக்கிடப்பட்ட வருடாந்த அரச தொழில் முயற்சிகள் சீர்திருத்தம், பங்குச் சந்தையில் நிலவிய நலிவடைந்த நிலமைகள் காரணமாக இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட முடியவில்லை. தனியார் மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகள் 21இல், 13 கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 20 சதவீதத்தை பொதுமக்களுக்கு வழங்குவதன்மூலம் பட்டியலிடப் பட்டுள்ளது. பட்டியலிடப்பட்ட இப் பதின்மூன்று பெருந்தோட்டக் கம்பனிகளின சந்தை மூலதனப்படுத்தல் ரூ.5,061 மில்லியனாக விளங்கி 1998இல் கொழும்பு பங்குச் சந்தையின் மூலதனப் படுத்தலின் 4 சதவீதமளவுக்கு வகைகூறியது. 1995இன் பிற்பகுதியில் ஆரம்பித்த

**அட்டவணை 8.6**
அடையப்பட்ட தனியார் மயமாக்கல் பெறுகைகள் 1999 (அ)

| தொழில் முயற்சிகளின் பெயர் | பெரும்பான்மைப பங்குகளின் விற்பனை | | | பொதுப் பங்கு வழங்கல் | | ஈடுகொள் ளப்பட்ட மொத்தத் தொகை ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| | % உரிமை மாற்றல் | உள் நாட்டு ரூபா மில்லியன் | வெளி நாட்டு ரூபா மில்லியன் | % உரிமை மாற்றல் | ஈடுகொள் ளப்பட்ட தொகை ரூபா மில்லியன் | |
| **பெருந்தோட்டக் கம்பனிகள்** | | | | | | |
| வட்டவளை பெருந்தோட்டம் | | | | 19 | 231.80 | 231.80 |
| மஸ்கெலியா பெருந்தோட்டம் | | | | 19 | 171.00 | 171.00 |
| மடுல்சீமா பெருந்தோட்டம் | | | | 20 | 60.00 | 60.00 |
| கடுகஸ்தென்ன பெருந்தோட்டம் | | | | 20 | 40.00 | 40.00 |
| பலாங்கொட பெருந்தோட்டம் | | | | 39 | 233.90 | 233.90 |
| உடுபுசல்லாவ பெருந்தோட்டம் | | | | 20 | 19.00 | 19.00 |
| ககவத்த | | | | 20 | 33.00 | 33.00 |
| **ஏனைய தொழில் முயற்சிகள்** | | | | | | |
| கொழும்பு கொமர்சியல் கூட்டுநிலையம் (பொறி) | 90.00 | 38.50 | | | | 38.50 |
| எயர் லங்கா | 26.00 | | 2816.16 | | | 2816.16 |
| ஓரியன்ற் லங்கா | 37.0 | | 740.00 | | | 740.00 |
| இங்குராகொட விதை நெல் பண்ணை | | | | | | 3.88 |
| **மொத்தம்** | | 38.50 | 3556.16 | | 788.70 | 4387.24 |

(அ) கொழும்புப் பங்கு மாற்றுக்குத் தரகுப்பணமும், ஏனைய பணிகள் கட்டணமும், ஏனையனவும் செலுத்திய பின்னர் உரிமை மாற்றுப் பெறுகைகளிலிருந்து பெறப்பட்ட தேறிய பெறுவனவுகளை அரசாங்கக் கணக்கு காட்டி நிற்கின்றது. அரச தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊடாக பெறப்பட்ட பெறுகைகளை மட்டும் அட்டவணை காட்டுகின்றது. இதற்கு மேலாக, தவணைக் கட்டணக் கொடுப்பனவுகள் திறைசேரியால் நேரடியாகப் பெறப்படுகின்றன.

மூலம்: அரச தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு.

பெருந்தோட்டக் கம்பனிகளின் உரிமை மாற்றல் இதுவரை அரசின் அரசிறைக்கு ரூ.6.5 பில்லியனை உருவாக்கியுள்ளது.

செயலிழந்த தனியார்மயமாக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் மாற்றப்பட்ட உரிமையை மீளப்பெறல் 1998இலும் தொடர்ந்தது. 1993இல் வரையறுக்கப்பட்ட காகோ போட் டிஸ்பச் கம்பனிக்கு (60 சதவீதப் பங்குகள்) விற்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமேசல் கம்பனி (என்சினியரிங்) ஓர் செயலிழந்த தனியார் மயப்படுத்தப்பட்ட கம்பனியாக 1995இல் அரசாங்கத தினால் பொறுப்பேற்கப்பட்டு 1998இல் வரையறுக்கப் பட்ட செறென்டிப் எஞ்சினியரிங் ஏஜன்சிகளுக்கு அதன் பங்குகளின் 90 சதவீதத்தை விற்பதன்மூலம் மாற்றப் பட்டதுடன், அரசின் அரசிறைக்கு ரூ.38 மில்லியனையும் பெற்றுக்கொடுத்தது. வரையறுக்கப்பட்ட லங்கா லோக ஹாட்வெயரும் அதன் முழுமையான உடைமையையும் இலங்கை கெவி இன்டஸ்ரீஸ் அன்ட் கொன்ஸ்ரக்ஸன் கம்பனிக்கு மாற்றியதன் மூலம் மீள் உரிமைமாற்றம் செய்யப்பட்டது. எனினும், இக் கொடுக்கல் வாங்கல், கம்பனியின் சொத்துக்களின் பெறுமதியைவிட அதன் பொறுப்புக்கள் விஞ்சியிருந்தமையால் அரசுக்கு எதுவித வருமானத்தையும் கொடுக்கவில்லை.

1998 வரவு செலவுத் திட்டம், தனியார் துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரச பண்ணைகளை நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுப்பதன்மூலம் வர்த்தக ரீதியிலான விதைநெல் உற்பத்தியை முன்னேற்றுவதற்கு முன்மொழிந்தது. ஹிங்குராகொடை விதை நெற் பண்ணை வரையறுக்கப்பட்ட சிஜசி வளமாக்கிக்கு (தனியார்) குத்தகைக்கு வழங்கப்பட்டதுடன், இது ரூ.3.88 மில்லியனை (அசையும் சொத்தாக ரூ.3 மில்லியனும் காணி மற்றும் நிலையான சொத்துக்களின் நீண்டகால குத்தகைக்கு ரூ.0.88 மில்லியனும்) அரசின் அரசிறையாகப் பெற்றுக்கொடுத்தது.

## 8.7. பற்றாக்குறையை நிதியிடல்

1998இன் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை (கொடைகளுக்கும் தனியார் மயமாக்கல் பெறுகை களுக்கும் முன்னர்) 1997இன் ரூ.70,061 மில்லியனுடன் ஒப்பிடுகையல் ரூ.93,147 மில்லியனுக்கு பெருமளவில் அதிகரித்தது. 1998இல் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு ரூ.28,548 மில்லியன்கொண்ட மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் பயன்படுத்தப்பட்டதுடன், இது 1997ஐவிட 23 சதவீதம் கூடியதாகும். எனினும், ரூ.18,351 மில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவு காரணமாக, இவ்வாண்டில் தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ.10,190 மில்லியனாக விளங்கியது. பற்றாக்குறையின் தேறிய உள்நாட்டு நிதியிடல் முன்னைய ஆண்டில் அவதானிக் கப்பட்ட ரூ.19,480 மில்லியனுக்கு மாறாக ரூ.71,362 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன்படி, மொ.உ.உ.இன் சதவீதமாக தேறிய உள்நாட்டு நிதியடல் 1997இன் 3.4 சதவீதத்திலிருந்து 1998இல் 7 சதவீதத்திற்கான கணிசமானதொரு அதிகரிப்பைக் கொண்டிருந்தது. தேறிய உள்நாட்டு மூலங்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள், வங்கியல்லா மூலங்களிலிருந்தான ரூ.52,408 மில்லியனைக் கொண்டிருக்கையில், வங்கிக் கடன்பாடுகள் ரூ.18,954 மில்லியனாக விளங்கியது. இது 1997இல் வங்கித் துறைக்கான ரூ.2,171 மில்லியன் மீள் கொடுப்பனவுக்கு முற்றிலும் முரணானதாகும்.

1998இல் உள்நாட்டு மூலங்களிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் ரூ.113,908 மில்லியனாக விளங்கியது. வங்கியல்லா உள்நாட்டு மூலங்களிலிருந் தான மொத்தக் கடன்பாடுகள், 1997இன் ரூ.57,408 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1998இல் ரூ.94,954 மில்லியனாக விளங்கியது. 1998இல் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்தான மூலவளத் திரட்டல்களின் முக்கிய கருவிகளாக ரூபாக்கடன்கள், திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பன தொடர்ந்து இருந்தன. நடுத்தரகால படுகடனின் சந்தைச் சார்பு, 1997இன் ரூ.8,224 மில்லியன்கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில், 1998இல் திறைசேரி முறிகளூடாக ரூ.34,509 மில்லியனைத் திரட்டியதன்மூலம் மேலும் அதிகரித்தது. திறைசேரி முறிகளின் 2, 3, மற்றும் 4 வருட முதிர்ச்சிகள் மீதான நறுக்கு வீதங்கள் முறையே 11.0, 11.5 மற்றும் 12.0 சதவீதங்களில் நிர்ணயிக்கப் பட்டிருக்கையில், இப் பிணைகளுக்கான நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு வீதங்கள் 10.81 - 13.94 சதவீதம், 12.44 - 13.93 சதவீதம், 12.93 - 13.94 சதவீதம் ஆகிய வீச்சுக்களில் நிச்சயமற்றுக் காணப்பட்டது. நறுக்கு வீதத்திற்கும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவுக்கும் இடையேயான குறிப்பிடத்தக்க வேறுபாடானது 1998இல் ரூ.1,156 மில்லியன்கொண்ட காசுப் பற்றாக்குறையை விளைவித்தது. 1998இல் திறைசேரி முறி நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநர்களாக ஊழியர் சேம நிதியம், சேமிப்பு நிறுவனங்கள் ஆகிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் முறையே ரூ.8,812 மில்லியனையும் ரூ.8,763 மில்லியனையும் முதலீடு செய்வதன்மூலம் தொடர்ந்தும் விளங்கினர். இக் கருவியின் அதிகரித்த பிரபல்யத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தனியார் துறையில் வங்கியல்லா ஏனைய முதலீட்டாளர்களால் திறைசேரி முறிகளுக்கான உதவுதொகைகள் 1997இன் ரூ.3,503 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.17,320 மில்லியனாக விளங்கின.

1998இல் ரூபாக் கடன்களில் திரட்டுதல் மூலமான மொத்தக் கடன்பாடுகள் ரூ.52,300 மில்லியனைப் பெற்றுக்கொடுத்தன. எனினும், நேரத்திற்கு முன்னான தீர்ப்பனவுக்கு அரசு இசைந்தமையால் ரூபாப் பிணைகள் மீதான ரூ.16,000 மில்லியன்கொண்ட தொகையை உள்ளடக்கிய ரூ.41,231 மில்லியன் மீள் கொடுப்பன

வானது, இவ்வாண்டில் ரூ.11,069 மில்லியன்கொண்ட ஓர் தேறிய கடன்பாட்டை விளைவித்தது. 1997இல் ரூபாக் கடன்களூடான தேறிய கடன்பாடுகள் ரூ.33,500 மில்லியனாக விளங்கின. இவ்வாண்டில் வரவு செலவுத் திட்ட அழுத்தங்கள், ஆண்டின் ஆரம்பத்திலான 11.00-11.25 சதவீதத்திலிருந்து 1998இன் பின்னைய பகுதியில் 12.00-12.25 சதவீதத்திற்கு அதிகரித்த ரூபாக் கடன் வட்டி வீத அமைப்பில் பிரதிபலிக்கப்பட்டன. முன்னைய ஆண்டைப் போலவே, ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்துக்கான பிரதான உதவுநராக 1998இல் மொத்த முதலீடான ரூ.38,672 மில்லியனுடன் ஊழியர் சேமநிதியம் விளங்கியது. தேசிய சேமிப்பு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ரூ.9,528 மில்லியனாக விளங்குகையில், எஞ்சிய ரூ.4,100 மில்லியன் பெருமளவில் ஏனைய நிறுவன ரீதியிலான முதலீட்டாளர்களால் ஏற்படுத்தப்பட்டன.

1998இல் திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்கள் மூலம் பெற்ற மூலவளத் திரட்டல்கள் ரூ.7,000 மில்லியனாக விளங்கியது. எனினும், இவ்வாண்டில் ரூ.2,000 மில்லியன் பெறுமதிகொண்ட திறைசேரி உண்டியல்களின் தீர்ப்பனவு 1998இல் ரூ.5,000 மில்லியன்கொண்ட தேறிய வழங்கலுக்கு வழிவகுத்தது. இரண்டாம் நிலைச் சந்தைத் தொழிற்பாடுகளுக்கான சீராக்கத்திற்காக மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் ரூ.1,016 மில்லியனால் ரூ.8,238 மில்லியனுக்கு அதிகரித்தது. இதற்கு மாறாக, வர்த்தக வங்கிகள் வசமிருந்த திறைசேரி உண்டியல் உடைமை 1997இன் ரூ.20,490 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.13,552 மில்லியனுக்கு, ரூ.6,938 மில்லியன் கொண்டதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, வங்கித் துறை வசமுள்ள திறைசேரி உண்டியல்களின் பங்கு 1997இன் 33 சதவீதத்திலிருந்து 1998இல் 20 சதவீதத்திற்கு குறைவடைந்திருக்கையில், வங்கியல்லாத் துறையிடமிருந்த திறைசேரி உண்டியல்கள் இவ்விரு ஆண்டுகளுக்கு மிடையில் 67 சதவீதத்திலிருந்து 80 சதவீதத்திற்கு அதிகரித்தன.

1998இல் பாரிய மூலவள இடைவெளி ஒன்றின் மத்தியிலும் அரசு பற்றாக்குறையை நிதியிடுவதற்கு வங்கித் தொழில் முறையிலிருந்தான கடன்பாடுகளை நாடியது. இதன்படி, வங்கித் தொழில் முறையில இருந்தான தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகள் 1998இல் ரூ.18,954 மில்லியனாக (ஐ.அ.டொலர் 100 மில்லியன்கொண்ட வெ.நா.வ.பி. கடன் உள்ளடங்கலாக) விளங்கியது. சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களில் ரூ.660 மில்லியன் குறைப்பால் ஏற்படுத்தப்பட்ட சுருக்கத் தாக்கத்தின் மத்தியிலும் தற்காலிக முற்பணங்களின் பயன்பாட்டின் இணைந்த தாக்கம் ரூ.1,885 மில்லியனாலும், திறைசேரி உண்டியல் உடைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ.1,016 மில்லியனாலும், அரச வைப்பு நிலுவைகளின் மீளப் பெறல் ரூ.3.368 மில்லியனாலும் அதிகரித்தமை 1998இல் மத்திய வங்கியிலிருந்தான ரூ.5,609 மில்லியன்கொண்ட தேறிய கடன்பாட்டை விளைவித்து, பொருளாதாரத்தின் ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்தது.

**வரைபடம் 8.5**
**பற்றாக்குறையை நிதியிடல்**




1998இல் வர்த்தக வங்கிகளிலிருந்து அரசுக்கான தேறிய கடன் ரூ.13,345 மில்லியனால் அதிகரித்தமை இறக்குமதி உண்டியல்களின் அதிகரித்த பயன்பாடு (ரூ.9,892 மில்லியன்), வர்த்தக வங்கிகள் வசமிருந்த திறைசேரி முறிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (ரூ.3,232 மில்லியன்) அரச வைப்புக்கள் ரூ.2,083 மில்லியனால் குறைவடைந்தமை என்பவற்றில் பிரதிபலிக்கப்பட்டது.

1998இல் மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் 23 சதவீதத்தால் ரூ.28,548 மில்லியனுக்கு அதிகரித்து, 1998 வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதன் 91 சதவீதத்தைப் பூர்த்தி செய்தது. தேறிய நியதிகளில், 1998இல் பற்றாக்குறையை நிதியிடத் தேவையான வெளிநாட்டு மூலவளங்கள் மொ.உ.உ.இன் 1 சதவீதமான ரூ.10,197 மில்லியனாக விளங்கி, 1998இல் பற்றாக்குறையின் 12 சதவீதத்தை மட்டுமே நிதியிடப் போதுமானதாக இருந்தது. வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட கூடிய மட்டத்திலான கடன் வழங்கல் மற்றும் அரச முதலீட்டின் விரைவு, மூலதனச் செலவினத்திற்குத் தேவையான உள்நாட்டு நிதியங்களின் ஒதுக்கீடு என்பன வெளிநாட்டு உதவியின் அதிகரித்த பயன்பாட்டுத் தேவைக்கான முக்கிய காரணங்களாக இனம் காணப்பட்டுள்ளன.

## 8.8. அரச படுகடன்

1998இல் அரச படுகடன் ரூ.907,426 மில்லியனாக விளங்கியது. மொ.உ.உ.இன் சதவீதமாக இது 1997இன் 86 சதவீதத்திலிருந்து 89.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது 1993இலும் 1996இலும் முறையே இரு அரச

வங்கிகளினதும், தேசிய சேமிப்பு வங்கியினதும் மீள் மூலதனத்திற்காக வழங்கப்பட்ட நீண்டகால முறிகளின் ரூ.47,961 மில்லியன் கொண்ட தொகையையும் உள்ளடக்குகின்றது. இம்முறிகள் நீங்கலான வெளிநின்ற படுகடன் ரூ.859,465 மில்லியனாக விளங்கி 21 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மீள் அமைப்பு முறிகள் நிங்கலான உள்நாட்டுப் படுகடன் ரூ.398,586 மில்லியனாக விளங்கி 1997இன் 47 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தப் படுகடனின் 46 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ.146,961 மில்லியன்கொண்ட குறுகிய காலப் படுகடனையும், ரூ.251,625 மில்லியன்கொண்ட நடுத்தர மற்றும் நீண்டகால படுகடனையும் கொண்டுள்ளது. இதன்படி, குறுகியகாலப் படுகடனின் பங்கு 1997இன் 40 சதவீதத்திலிருந்து 1998இன் 37 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன் அவற்றின் பங்கை 60 சதவீதத்திலிருந்து 63 சதவீதத்திற்கு அதிகரித்தன. 1998இல் வெளிநாட்டுப் படுகடனின் இருப்பு 23 சதவீதத்தால் ரூ.460,879 மில்லியனுக்கு அதிகரித்தது.

### உள்நாட்டுப் படுகடன்

மீளமைப்பு முறிகள் நீங்கலான உள்நாட்டுப் படுகடன் 19 சதவீதத்தால் அதிகரித்து ரூ.398,586 மில்லியனை அடைந்தது. இதில், நடுத்தரகால மற்றும் நீண்டகாலப் படுகடன் ரூ.202,609 மில்லியன்கொண்ட ரூபாப் பிணைகளையும், ரூ.48,915 மில்லியன்கொண்ட திறைசேரி முறிகளையும், திறைசேரி வைப்புப் பத்திரங்கள் மீதான ரூ.12 மில்லியன்கொண்ட ஓர் பொறுப்பையும் கொண்டுள்ளது. மீளமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டவை நீங்கலான ரூபாப் பிணைகள் கணக்கிலான படுகடன் இருப்பு ரூ.202,609 மில்லியனாக விளங்கி 1997இல் அவதானிக்கப்பட்ட 21 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1998இல் 6 சதவீதம்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1997இன் 2-8 வருட முதிர்ச்சிக் காலங்களுக்கு 11.25-14.5 சதவீத

வரைபடம் 8.6
படுகடன் உள்ளமைப்பு




வீச்சுடனான வட்டிவீத வழங்கலுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 4-10 வருடங்கள் நீண்ட முதிர்ச்சியைக் கொண்ட ரூபாக்கடன்கள் 11-12.5 சதவீத வீச்சுடனான வட்டி வீதத்தில் வழங்கப்பட்டன. ரூபாக கடன் நிகழ்ச்சித் திட்டத்துக்கான முக்கிய உதவுநர்களாக தொடர்ந்தும் ஊழியர் சேம நிதியமும் தேசிய அபிவிருத்தி வங்கியும் விளங்கின.

1998இல் திறைசேரி முறிகளின் இருப்பு ரூ.48,915 மில்லியனுக்கு அதிகரித்து, படுகடனின் சந்தை சார்ந்த போக்கில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. நடுத்தரகால மற்றும் நீண்டகாலப் படுகடனின் ஒரு பங்காக திறைசேரி முறிகள் 1997இன் 5 சதவீதத்திலிருந்து 1998இல் 19 சதவீதத்திற்கு அதிகரித்தன. திறைசேரி முறிகளுக்கான உதவு தொகைகள் 1997இல் முக்கிய உதவுநர்களான ஊழியர் சேம நிதியம், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் வங்கித் துறையிலிருந்து 1998இல் ஏனைய வங்கியல்லா முதலீட்டாளர்களுக்கு மாற்றப்பட்டன. திறைசேரி முறிகளை திரவச் சொத்துக்களாக கணிப்பதற்கு வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கத் தீர்மானித்தமையும், மத்திய வங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிக்ள சார்பான கொடுக்கல் வாங்கல்களுக்கான இம்முறிகளின் ஏற்கத்தக்க தன்மையும் திறைசேரி முறிகளுக்கான வர்த்தக வங்கிகளின் கேள்வியை அதிகரித்தன.

திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டைப் போலவே வீழ்ச்சியடைந்ததுடன் 1998இல் படுகடன் இருப்பு 1997இன் ரூ.83 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.12 மில்லியனாக விளங்கியது.

திறைசேரி உண்டியல்கள் மற்றும் தற்காலிக முற்பணங்கள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்பாடுகளை உள்ளடக்கிய குறுகிய காலப் படுகடன் 1997இன் இறுதியிலான ரூ.133,303 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.146,961 மில்லியனுக்கு அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் பேரிலான படுகடன் இருப்பு, 1998இலான ரூ.5,000 மில்லியன் புதிய வழங்கல்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் காரணமாக ரூ.119,996 மில்லியனுக்கு அதிகரித்தது. தற்காலிக முற்பணங்கள் பேரிலான குறுகியகாலப் படுகடன் 1997இன் ரூ.18,037 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.20,192 மில்லியனுக்கு அதிகரித்தது.

மீளமைப்பு முறிகளை உள்ளடக்கி வங்கித் தொழில் முறை வசமுள்ள படுகடன் 1997இன் இறுதியிலான ரூ.101,966 மில்லியன்கொண்ட வெளிநின்ற பொறுப்பிலிருந்து ரூ.100,093 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. நீண்டகால முறிகள் நீங்கலான

படுகடன் இருப்பு 1997இறுதியின் படுகடனான ரூ.54,005 மில்லியனிலிருந்து ரூ.52,942 மில்லியனுக்கு 2 சதவீதம்கொண்ட சிறிதளவான வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. வர்த்தக வங்கிகள் வசமிருந்த படுகடன் 1998இல் ரூ.71,753 மில்லியனுக்கு 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு முக்கிய காரணமாக வர்த்தக வங்கிகள் வசமிருந்த திறைசேரி உண்டியல் பேரில் வெளிநின்ற படுகடன் 1997இன் ரூ.30,857 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.14,850 மில்லியனுக்கு வீழ்சியடைந்தமை விளங்கியது. திறைசேரி முறிகள் கணக்கிலான வர்த்தக வங்கிகளின் பொறுப்பு ரூ.4,020 மில்லியனால் அதிகரித்ததற்கு மத்தியிலும், 1998இல் ஒப்பந்தம் செய்யபபட்ட ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன்கொண்ட வெ.நா.வ.பி.இலிருந்து பெறப்பட்ட ரூ.6,773 மில்லியன் படுகடனிற்கு மத்தியிலும் வர்த்தக வங்கிகளின் படுகடனில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இதேவேளை, மத்திய வங்கி வசமிருந்த படுகடன் 1997இன் ரூ.24,999 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.29,150 மில்லியனிற்கு அதிகரித்தமைக்கு, திறைசேரி உண்டியல்கள் பேரிலான அதிகரித்த பொறுப்பு ரூ.2,226 மில்லியனாலும் தற்காலிக முற்பணங்கள் ரூ.1,885 மில்லியனாலும் அதிகரித்தமையே காரணமாக விளங்கியது.

## வெளிநாட்டுப் படுகடன்

வெளிநாட்டுப் படுகடன் ரூ.460,879 மில்லியனாக விளங்கி 1997இன் இறுதியிலான ரூ.383,116 மில்லியன் கொண்ட படுகடன் இருப்பைவிட 20 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுப் படுகடன் பேரிலான வெளிநின்ற பொறுப்பிலேற்பட்ட அதிகரிப்பு ரூ.12,645 மில்லியன்கொண்ட தேறிய கடன்பாட்டாலும் செலாவணி வீத வேறுபாடுகளினால் ஏற்பட்ட ரூ.65,118 மில்லியன்கொண்ட ஓர் கணிசமான அதிகரிப்பாலும் ஏற்பட்டது. ஒப்பீட்டளவில் 1997இல் செலாவணிவீத வேறுபாடுகளினால் படுகடன் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ.2,004 மில்லியனாக விளங்கியது.

1998இல் சலுகை ரீதியிலான கடன்கள் 1997இன் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 23 சதவீதத்தால் அதிகரித்து ரூ.445,938 மில்லியனாக விளங்கியது. மொத்த வெளிநாட்டுப் படுகடனின் சதவீதமாக சலுகை ரீதியிலான நியதிகள் மீதான படுகடன் 1997இன் 95 சதவீதத்திலிருந்து 1998இல் 97 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. பல்புடை மூலங்களுக்கான படுகடன் மொத்தத்தின் 47 சதவீதத்திற்கு வகை கூறுகையில், எஞ்சியவை இருபுடை மூலங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். முக்கிய பல்புடை மூலங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் போன்ற நிறுவனங்களைக் கொண்டிருக்கையில்

**அட்டவணை 8.7**
**வெளிநின்ற மத்திய அரச படுகடன்**
**(ஆண்டு முடிவில்)**

ரூபா மில்லியன்

| விடயம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| **மொத்த உள்நாட்டுப் படுகடன் (அ)** | **249,119** | **285,759** | **349,007** | **382,962** | **446,547** |
| குறுகிய கால | 108,725 | 127,470 | 142,689 | 133,303 | 146,961 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 140,394 | 158,289 | 206,318 | 249,659 | 299,586 |
| படுகடன் கருவிகளின்படி | 249,119 | 285,759 | 349,007 | 382,962 | 446,547 |
| ரூபாப் பிணைகள் | 137,554 | 157,928 | 205,975 | 239,475 | 250,570 |
| திறைசேரி உண்டியல்கள் | 98,896 | 113,771 | 124,996 | 114,996 | 119,996 |
| திறைசேரி முறிகள் | - | - | - | 10,000 | 48,915 |
| ஏனையவை | 12,669 | 14,060 | 18,036 | 18,491 | 27,066 |
| நிறுவனங்களின்படி | 249,119 | 285,759 | 349,007 | 382,962 | 446,547 |
| வங்கிகள் | 100,043 | 113,355 | 103,553 | 101,966 | 100,903 |
| மத்திய வங்கி | 21,345 | 28,684 | 34,807 | 24,999 | 29,150 |
| வர்த்தக வங்கிகள்(ஆ) | 78,698 | 84,671 | 68,746 | 76,967 | 71,753 |
| கடன்கரைப்பு நிதியம் | 137 | 100 | 100 | 100 | 100 |
| வங்கியல்லாத்துறை | 148,939 | 172,304 | 245,354 | 280,896 | 345,544 |
| தேசிய சேமிப்பு வங்கி | 46,407 | 48,406 | 47,794 | 62,498 | 67,260 |
| ஊழியர் சேம நிதியம் | 79,745 | 95,000 | 113,236 | 134,867 | 157,711 |
| ஏனையவை | 22,786 | 28,898 | 84,324 | 83,531 | 120,573 |
| **மொத்த வெளிநாட்டுப் படுகடன்** | **301,812** | **346,286** | **359,390** | **383,116** | **460,879** |
| செயற்றிட்டக் கடன்கள் | 246,075 | 286,848 | 302,666 | 321,122 | 399,890 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 55,737 | 59,438 | 56,724 | 61,994 | 60,989 |
| வகைகளின்படி | 301,812 | 346,286 | 359,390 | 383,116 | 460,879 |
| சலுகைக் கடன்கள் | 293,556 | 336795 | 350,024 | 362,435 | 445,938 |
| சலுகையல்லாக் கடன்கள் | 8,256 | 9,491 | 9,366 | 20,681 | 14,941 |
| நாணயத்தின்படி | 301,812 | 346,286 | 359,390 | 383,116 | 460,879 |
| சி.எ.உ. | 95,340 | 115,537 | 130,818 | 142,733 | 172,375 |
| ஐ.அ.டொலர் | 67,546 | 72,488 | 74,623 | 89,896 | 89,757 |
| யென் | 89,291 | 101,537 | 99,868 | 98,738 | 139,548 |
| டொய்ச் மார்க் | 25,009 | 29,114 | 27,313 | 25,746 | 29,432 |
| ஏனையவை | 24,626 | 27,610 | 26,768 | 26,003 | 29,767 |
| வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் | 950 | 1,020 | 923 | 499 | 575 |
| **மொத்த வெளிநின்ற அரச படுகடன்** | **550,931** | **632,045** | **708,397** | **766,078** | **907,426** |
| கடன்கரைப்பு நிதியம் நீங்கலாக மொத்த வெளிநின்ற அரச படுகடன் | 550,794 | 631,945 | 708,297 | 765,978 | 907,326 |
| **விடயம்: படுகடன்/மொ.உ.உ.(%)** | | | | | |
| உள்நாட்டுக் கடன்பாடு | 43.0 | 42.8 | 45.43 | 43.0 | 44.0 |
| வெளிநாட்டுக் கடன்பாடு | 52.1 | 51.89 | 46.8 | 43.0 | 45.4 |
| மொத்தக் கடன்பாடு | 95.1 | 94.6 | 92.2 | 86.0 | 89.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) முறையே 1993இலும் 1996இலும் வழங்கப்பட்ட ரூ.240,880 இலட்சம் மற்றும் ரூ.238,730 இலட்சம்கொண்ட நீண்டகால முறிகளை உள்ளடக்குகின்றது.

(ஆ) வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்து பெற்ற ரூ.6773 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) கொண்ட கடன்களையும் உள்ளடக்கும்.

முக்கிய இருபுடை மூலங்கள் முக்கியமாக யப்பான், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் சேர்மனி என்பனவற்றைக் கொண்டிருந்தன. சலுகை ரீதியில் அல்லாத கடன்கள் பேரிலான படுகடன் இருப்பு ரூ.14,941 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது.

1998இல் செயற்றிட்டக் கடன்கள் 25 சதவீதத்தால் ரூ.399,890 மில்லியனுக்கு அதிகரித்து மொத்தப்

அட்டவணை 8.8
வெளிநாட்டுக் கடன்கள் மீது செலாவணி வீத மாற்றத்தின் தாக்கம் (அ)

ரூபா மில்லியன்

| விடயம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) |
|---|---|---|---|---|---|
| மொத்தப் பெறுகைகள் | 19,384 | 24,359 | 23,992 | 24,642 | 30,996 |
| மீள் கொடுப்பனவுகள் | 7,606 | 8,477 | 8,939 | 10,004 | 18,351 |
| தேறிய பெறுகைகள் | 11,778 | 15,882 | 15,053 | 14,638 | 12,645 |
| செலாவணிவீத மாறுபாடு காரணமாக பொறுப்பில் ஏற்பட்ட மாற்றம் | 19,810 | 28,592 | -1,654 | 2,004 | 65,118 |
| காலப்பகுதியின் இறுதியில் பொறுப்பு | 301,812 | 346,286 | 359,685 | 383,116 | 460,879 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) குறிப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுமதி தின பதிவு முறையினை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை.

படுகடனின் 87 சதவீதத்திற்கு வகைகூறியது. செயற்றிட்ட நிதியடலின் மிகப் பெரிய இருபுடை மூலமாக யப்பான் 1998இல் ரூ.11,160 மில்லியனைப் பகிர்ந்தளித்திருக்கையில், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு இரண்டும் இணைந்து மொத்தமாக ரூ.14,086 மில்லியன்கொண்ட பகிர்ந்தளிப்புக்களுக்கு வகைகூறின. பணம், பண்டம் மற்றும் ஏனைய கடன்கள் வடிவிலான செயற்றிட்டமல்லாக் கடன்கள் 1997இன் ரூ.61,994 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.60,989 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

### படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.114,866 மில்லியனுக்கு 24 சதவீதத்தால் அதிகரித்தன. இதில், ரூ.59,968 மில்லியன் கடன் தீர்ப்பனவுகளாக அமைந்து, மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் 52 சதவீதத்திற்கு வகைகூறியது. வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.54,898 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. அரசின் நடைமுறைச் செலவினத்தின் விகிதமாக வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 29.9 சதவீதத்திலிருந்து 1998இல் 27.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உ.இன் விகிதமாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 10.4 சதவீதத்திலிருந்து 1998இல் 11.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

ரூ.59,968 மில்லியன் கொண்ட மொத்த தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்நாட்டுப் படுகடன் பேரிலான ரூ.41,617 மில்லியனையும் வெளிநாட்டுப் படுகடன் பேரிலான ரூ.18,351 மில்லியனையும் கொண்டுள்ளது. 1998இல் உள்நாட்டுத் துறையின் மீள் கொடுப்பனவு ரூ.17,596 மில்லியனால் அதிகரித்தமையானது விருப்ப முதிர்ச்சியுடனான ரூபாக் கடன்களின் முன்கூட்டியே தீர்ப்பனவு செய்யப்பட்டதால் ஏற்பட்டதாகும். வெளிநாட்டுத் துறைக்கான தீர்ப்பனவுக் கொடுப்பனவு பாதுகாப்புப் பணிகளின் கொள்வனவுக்கான பிந்திய கொடுப்பனவுகளின் பேரிலான ரூ.5,434 மில்லியன்கொண்ட தொகையை உள்ளடக்கியுள்ளது.

அட்டவணை 8.9
அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

ரூபா மில்லியன்

| விடயம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 66,213 | 77,663 | 81,263 | 92,519 | 114,866 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 22,671 | 36,546 | 33,240 | 37,272 | 59,968 |
| உள்நாட்டு | 15,065 | 28,069 | 22,749 | 24,021 | 41,617 |
| வெளிநாட்டு | 7,606 | 8,477 | 10,491 | 13,251 | 18,351 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | | | | | |
| உள்நாட்டு | 43,542 | 41,117 | 48,023 | 55,247 | 54,898 |
| குறுங்கால | 38,031 | 34,955 | 41,284 | 48,555 | 47,598 |
| நடுத்தரகால | 18,712 | 13,947 | 18,053 | 18,174 | 12,398 |
| நீண்டகால | 16,699 | 21,008 | 23,231 | 30,381 | 35,200 |
| வெளிநாட்டு | 5,551 | 6,162 | 6,739 | 6,692 | 7300 |
| வட்டி/ நடைமுறைச் செலவு (%) | 34.26 | 26.67 | 27.42 | 29.90 | 27.50 |
| படுகடன் பணிகள்/ மொ.உ.உ.(%) | 11.13 | 11.63 | 10.57 | 10.39 | 11.32 |
| வெளிநாட்டுப் படுகடன் பணிகள்/ ஏற்றுமதி (%) | 8.27 | 7.50 | 7.60 | 7.27 | 8.37 |

(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1998இல் உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ரூ.47,598 மில்லியனாகவும், ரூ.7,300 மில்லியனாகவும் விளங்கின. 1998இல் வெளிநின்ற உள்நாட்டுப் படுகடனின் அளவில் ஏற்பட்ட 17 சதவீத அதிகரிப்புக்கு மத்தியிலும் 1998இல் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1997இன் ரூ.48,555 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.47,598 மில்லியன்கொண்ட சிறிதளவிலான வீழ்ச்சியொன்றைக் காட்டியது. 1998இல் திறைசேரி உண்டியல்களிலான வட்டிச் செலவினம் ரூ.5,776 மில்லியனால் ரூ.12,398 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து அரசின் வட்டிச் செலவில் குறைந்த வட்டி வீதங்களின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. இதேவேளை, நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன் மீதான வட்டி ரூ.4,819 மில்லியனால் ரூ.35,200 மில்லியனுக்கு அதிகரித்தது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.7,300 மில்லியனுக்கு 9 சதவீதத்தால் அதிகரித்தன.